# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## 2024 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டம்

[*2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*2024, ஏப்பிறல் மாதம் 05 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 132.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2024 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டம்**

[2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.ஓ. 47 /2015

**பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் பதிவு அதிகாரசபையைத் தாபிப்பதன்மூலம் அசைவுள்ள ஆதனத்திலான பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குபடுத்துவதற்கான நிறுவன ரீதியிலான கட்டுக்கோப்புக்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்தகைய அதிகாரசபையின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் எடுத்துக்கூறுவதற்கும்; கடனாளிகளினது அசைவுள்ள ஆதனத்திற்கு மல்லுக்கட்டும் பிணைப்பொறுப்புரிமைகளைக் கொண்டுள்ள அக்கடன் கொடுநர்களுக்கிடையே முன்னுரிமைகளைத் தீர்மானிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; பிணைப் பொறுப்பு உடன்படிக்கைகளுக்கான திறத்தவர்களின் உரிமைகளையும் கடமைகளையும் எடுத்துக் கூறுவதற்கும்; அசைவுள்ள ஆதனத்திலான பிணைப்பொறுப்பு உரிமைகள் இடாப்பொன்றைத் தாபிப்பதற்கும் பேணுவதற்கும்; 2009 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தை நீக்குவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடை நேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

**1.** (1) இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் .

(2) (இச்சட்டத்தில் ''நியமிக்கப்பட்ட தேதி'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இப்பிரிவின் ஏற்பாடுகள் தவிர்ந்த இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகள் பாராளுமன்றத்தில் எத்தேதியன்று சட்டமூலம் சட்டமாக வருகின்றதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

### பாகம் I

### முதனிலையானவை

சட்டத்தின் ஏற்புடைமை

**2**. மூன்றாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இச்சட்டத்தின் ஏற்பாடுகள்–

(அ) பிணைப்பொறுப்புரிமையின் வடிவத்தைப் பொருட்படுத்தாமலும் மற்றும் சொத்தின் வகையை அல்லது அத்தகைய பிணைப்பொறுப்புரிமையின் விடயப் பொருளாகவுள்ள துணைமைப் பொருளுக்கான உரித்தைக் கொண்டுள்ள ஆளைக் கருத்திற் கொள் ளாமலும், பின்வருவனவுட்பட ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல், பொருளளவில் பிணைப் பொறுப்புரிமையொன்றை உருவாக்குகின்ற ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல் தொடர்பிலும் –

(i) தட்டுமுட்டுப்பொருட்களின் ஈடு, நிபந்தனை யுடனான விற்பனை, கடன் தொகுதிப் பத்திரம், நிலையான தாக்கீடு, மிதக்கும் தாக்கீடு, அடைமானம், நம்பிக்கைப் பொறுப்புச் சட்டமுறையாவணம் அல்லது நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டுக்கும்; அத்துடன்

(ii) கடப்பாடொன்றின் கொடுப்பனவு அல்லது புரிகை பிணைப்பொறுப்பளிக்கப்படுமிடத்து தட்டுமுட்டுப் பொருட்பத்திரத்தின் ஒரு சாட்டுகை, ஒப்படைப்பு, குத்தகை அல்லது கைமாற்றுகைக்கும்;

(ஆ) ஒரு கணக்கின் அல்லது தட்டுமுட்டுப்பொருட் பத்திரத்தின் கைமாற்றுகை, கடப்பாடொன்றின்

கொடுப்பனவொன்றுக்கு அல்லது புரிகைக்குப் பிணைப்பொறுப்பாகாதவிடத்திலுங்கூட அத்தகைய கைமாற்றுகைக்கும்; அத்துடன்

(இ) ஓராண்டுக்காலத்துக்கு மேற்பட்ட குத்தகையொன்று கடப்பாடொன்றின் கொடுப்பனவொன்றுக்கு அல்லது புரிகைக்குப் பிணைப்பொறுப்பளிக்காதவிடத்திலுங்கூட அத்தகைய குத்தகைக்கும்

ஏற்புடையனவாதல் வேண்டும்.

சட்டத்தின் ஏற்புடைமை யிலிருந்து விலக்களித்தல்

**3.** (1) இச்சட்டத்தில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப் பட்டாலொழிய, இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பின்வருவனவற்றுக்கு ஏற்புடையனவாதலாகாது:-

(அ) வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டாலொழிய ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் சோந்தைக்கும் மற்றும் நீதிமன்றங்களினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒருப்பாடற்ற சோந்தைக்கும்;

(ஆ) ஒரு துணைமைப்பொருளுக்கு விளைவிக்கப்பட்ட இழப்புக்காக அல்லது சேதத்துக்காக, பணத்துக்கான ஓர் உரிமையின் கைமாற்றுகை தவிர அல்லது நட்டோத் தரவாதமாக அல்லது நட்டஈடாகக் காப்புறுதிப்பத்திர மொன்றின் கீழ் செலுத்தற்படற்பாலதான வேறு பெறுமதியின் கைமாற்றுகை தவிர, ஓர் ஆண்டுத்தொகை ஒப்பந்தத்தில் அல்லது அதன் கீழ் அல்லது ஒரு காப்புறுதிப்பத்திரத்தில் அல்லது அதன் கீழ் ஓர் அக்கறையின் அல்லது உரிமைக்கோரிக்கையின் கைமாற்றுகைக்கும்;

(இ) பொறுப்பேற்கப்பட்ட எந்த வேலையின் அல்லது அளிக்கப்பட்ட எந்தச் சேவைகளின் சாட்டுகை அல்லது கைமாற்றுகை சட்டத்தினால் தடைசெய்யப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் வேலைக்கான அல்லது அளிக்கப்பட்ட எவையேனும் சேவைகளுக்கான தற்போதைய அல்லது

எதிர்கால வேதனங்கள், சம்பளம், வேதனாதிகள் அல்லது தரகு அல்லது வேறேதேனும் வகையினதான கொடுப்பனவு என்பவற்றிலான அக்கறையின் கைமாற்றுகைக்கும்;

(ஈ) ஓர் ஒப்பந்தத்தின்கீழ் கைமாற்றுநரின் கடப்பாடுகளைப் புரியவுள்ள ஒரு கைமாற்றுணிக்கு, அவ்வொப்பந்தத்தின் கீழான கொடுப்பனவொன்றுக்கான ஈட்டிப்பெறா உரிமையின் கைமாற்றுகைக்கும்;

(உ) பின்வருவன தவிர, ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் ஈடு, தாக்கீடு அல்லது குத்தகையுட்பட, அத்தகைய ஏதேனும் ஆதனத்திலான அக்கறையொன்றின் உருவாக்குகைக்கும் அல்லது கைமாற்றுகைக்கும்:

(i) ஒரு பொருத்தியிலான அக்கறை; அல்லது

(ii) சாட்டுகையானது அசைவற்ற ஆதனத்தில் சாட்டுநரின் அக்கறையை உரித்துமாற்றாத அல்லது கைமாற்றாதவிடத்து, ஓர் ஈடு, தாக்கீடு அல்லது குத்தகையின்கீழ் கொடுப்பனவுக்கான உரிமையொன்றின் சாட்டுகை;

(ஊ) விற்பனையின் பின்னர் விற்பனையாளர் தொழிலின் தொடர்ந்து கட்டுப்பாட்டைக் கொண்டிருக்குமிடத்துத் தவிர, கணக்குகள், தட்டுமுட்டுப் பொருட்பத்திரங்கள் அல்லது பண்டங்கள் எத்தொழிலிலிருந்து எழுந்தனவோ அத்தொழிலின் விற்பனையின் பாகமாக அக்கணக்குகளின் தட்டுமுட்டுப் பொருட்பத்திரங்களின் அல்லது பண்டங்களின் விற்பனைக்கும்;

(எ) கைமாற்றுநருக்காகக் கணக்குகளைச் சேகரிப்பதனை வசதிப்படுத்தும் நோக்கத்துக்காக மட்டும் செய்யப்பட்ட கணக்குகளின் கைமாற்றுகைக்கும்;

(ஏ) இடைநிலைப்படுத்தப்பட்ட பிணைப் பொறுப்புகளுக்கும்;

(ஐ) (90ஆம் அத்தியாயமான) அடகுபிடிப்போர் கட்டளைச் சட்டத்திற்கமைந்தவொரு கொடுக்கல் வாங்கலுக்கும்;

(ஒ) நிலுவையாகவுள்ள எல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் முடிவுறுவதன்மேல் போகுமதியான எவையேனும் பெறுதகவுகள் தவிர்ந்த, அத்தகைய கொடுப்பனவைக் கொடுத்துத்தீர்த்தல் தொடர்பான ஏதேனும் உடன் படிக்கையினால் ஆளப்பட்ட நிதிசார் ஒப்பந்தங்களி லிருந்து அல்லது அவற்றின்கீழ் எழுகின்ற கொடுப் பனவுகளுக்கும்; அத்துடன்

(ஓ) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம், 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகாரசபைச் சட்டம், 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழிற் சட்டம் மற்றும் 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கை குடியியல் வான்செலவு அதிகாரசபைச் சட்டம் என்பவற்றின்கீழ் பண்டங்கள் பதிவுசெய்யப்பட்டவிடத்து ஒரு கடனாளியினால் வைத்திருக்கப்பட்ட பண்டங்களிலான அக்கறையொன்றின் கைமாற்றுகைக்கும்.

(2) ஓராம் உட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியின் நோக்கத்துக்காக, “இடைநிலைப்படுத்தப்பட்ட பிணைப்பொறுப்புக்கள்” என்பது, ஒரு பிணைப்பொறுப்புக் கணக்குக்கு வரவுவைக்கப்பட்ட பிணைப்பொறுப்புகள் மற்றும் ஒரு பிணைப்பொறுப்புகள் கணக்குக்குப் பிணைப்பொறுப்புகளை வரவுவைப்பதிலிருந்து விளைகின்ற பிணைப்பொறுப்புகளிலான உரிமைகள் அல்லது அக்கறைகள் என்று பொருளாகும்.

*நிறைவெய்துதல்*

**4**. பிணைப்பொறுப்புரிமையொன்று -

(அ) இச்சட்டத்தின் பாகம் III இன் நியதிகளின்படி அது செல்லுபடியானமுறையில் உருவாக்கப் பட்டுள்ளபோதும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு நிறை வெய்துவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட எல்லா வழிமுறைகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளபோதும்,

நிறைவாக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*நிறைவாக்கப் படாத பிணைப்பொறுப் புரிமைகளைக் கீழமைந்தன வாக்குதல்*

**5**. (1) துணைமைப்பொருளிலான நிறைவாக்கப்படாத பிணைப்பொறுப்புரிமை, பின்வருவனவற்றுக்குக் கீழமைந்த தாதல் வேண்டும்:-

(அ) நிறைவாக்கப்பட்ட பிணைப்பொறுப்புரிமையொன்றின் அக்கறை;

(ஆ) தீர்ப்பின் அறிவித்தலொன்று பதிவாளரிடம் பதிவு செய்யப்பட்ட நேரத்தில் அத்தகைய உரிமை நிறை வாக்கப்பட்டிராதவிடத்து, அத்தகைய அறிவித்தலைப் பதிவு செய்துள்ள கடன் கொடுநரொருவரின் அக்கறை; அத்துடன்

(இ) பந்தி (ஆ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு கடன்கொடுநரின் அக்கறைக்கமைய, அசைவுள்ள ஆதனத்தின் பகிர்ந்தளிப்பில் பங்குபற்றுவதற்கு, நியதிச்சட்டமுறையான அல்லது வேறுவகையான ஏதேனும் சட்டத்தின்கீழ் எவரேனுமாளின் உரிமை.

(2) (அ) துணைமைப்பொருளிலான நிறைவாக்கப்படாத பிணைப் பொறுப்புரிமையொன்று பின்வருவோருக்கெதிராகப் பயனுள்ளதாகாது-

(i) வங்கிமுறிந்த நேரத்தில் பிணைப் பொறுப்புரிமை நிறைவாக்கப்படாததாக விருப்பின், எவையேனும் கடனிறுவகையறவு வழக்கு நடவடிக்கைகளில் சாட்டுணியொருவர்; அல்லது

(ii) ஒடுக்குதற் கட்டளை ஆக்கப்படும்போது பிணைப்பொறுப்பு அக்கறை நிறைவாக்கப்படாதிருப்பின், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஒழித்துக் கட்டுநரொருவர்;

(ஆ) கைமாற்றம்பெறுநர் பின்வருவனவற்றைச் செய்தால், தட்டுமுட்டுப்பொருட்பத்திரம், உரித்தாவணங்கள் அல்லது பண்டங்கள் என்பவற்றிலான நிறைவாக்கப் படாத பிணைப்பொறுப்புரிமையொன்று அவற்றின் கைமாற்றுணிக்கெதிராகப் பயனுள்ளதாகாது:-

(i) ஒரு கடப்பாட்டின் கொடுப்பனவுக்கு அல்லது புரிகைக்குப் பிணைப்பொறுப்பளிக்காதவொரு கொடுக்கல்வாங்கலின் கீழ் துணைமைப் பொருளிலான அக்கறையைக் கொண்டால்;

(ii) பெறுமதி கொடுத்தால்; அத்துடன்

(iii) பிணைப்பொறுப்புரிமைபற்றி அறியாமல், துணைமைப்பொருளின் ஒப்படைப்பைப் பெற்றால்; அத்துடன்

(இ) கைமாற்றுணி பின்வருவனவற்றைச் செய்தால், கணக்குகள் தவிர்ந்த உருவப் பொருட்களிலான நிறைவாக்கப்படாத பொறுப்புரிமையொன்று அவற்றின் கைமாற்றுணிக்கெதிராகப் பயனுள்ளதாகாது:-

(i) ஒரு கடப்பாட்டின் கொடுப்பனவுக்கு அல்லது புரிகைக்குப் பிணைப்பொறுப்பளிக்காதவொரு கொடுக்கல்வாங்கலின் கீழ் துணைமைப் பொருளிலான அக்கறையைக் கொண்டால்; அத்துடன்

(ii) பிணைப்பொறுப்புரிமைபற்றி அறியாமல் பெறுமதி கொடுத்தால்.

## பாகம் II

## பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் பதிவு அதிகாரசபையைத் தாபித்தல்

*பிணைப்பொறுப் பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் பதிவு அதிகார சபையைத் தாபித்தல்*

**6**. (1) (இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் பதிவு அதிகாரசபை எனவழைக் கப்படும் அதிகாரசபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரினால் கூட்டிணைக்கப்பட்டவொரு குழுவாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், இடையறாவழியுரிமை யையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அதன் கூட்டிணைப்புப்பெயரில் அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

*அதிகார சபையின் குறிக்கோள்*

**7**. அதிகாரசபையின் குறிக்கோள், இச்சட்டத்தின் ஏற்பாடுக ளுக்கு இணங்கியொழுகி, அசைவுள்ள ஆதனத்திலான பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை ஒழுங்கு படுத்துவதனை வசதிப்படுத்துவதன்மூலமும் அதில் பங்கு பற்றுவதன்மூலமும் தேசிய பொருளாதாரத்தின் நலனை மேம் படுத்துவதாதல் வேண்டும்.

*அதிகார சபையின் கடமைகளும் பணிகளும்*

**8**. அதிகாரசபையின் கடமைகளும் பணிகளும் பின்வருவன வாதல் வேண்டும்:-

(அ) இச்சட்டத்தின் பாகம் VI இன் கீழ், அசைவுள்ள ஆதனத்தின் பிணைப்பொறுப்புரிமைகளைப் பதிவு செய்தல்;

(ஆ) தீர்ப்புக் கடன்கொடுநர்களின் உரிமைகளைப் பதிவு செய்தல்;

(இ) பணியகத்தினால் பேணப்படும் பதிவு முறைமையுடன் தொடர்புபட்ட கொள்கைகளைத் தீர்மானித்தல்;

(ஈ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அதிகார சபையினால் அளிக்கப்படும் சேவைகளுக்காக அறவிடப்படவேண்டிய கட்டணங்களை அல்லது வேறெவையேனும் விதிப்பனவுகளைத் தீர்மானித்தல்; அத்துடன்

(உ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் அதிகாரசபைக்கு குறிப்பாக குறித்தளிக்கப்பட்ட அத்தகைய கடமைகளையும் பணிகளையும் புரிதல் மற்றும் நிறைவேற்றுதல்.

*அதிகார சபையின் தத்துவங்கள்*

**09.** அதிகாரசபையானது அதன் குறிக்கோளை எய்துவதற் கெனவும் இச்சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் குறித்தளிக்கப்பட்ட கடமைகளையும் பணிகளையும் பயனுறப் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவசியமாக அல்லது தோதாக வரக்கூடிய வாறான அத்தகைய தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும்.

*அதிகார சபையின் பணிப் பாளர்கள் சபை*

**10.** (1) அதிகாரசபையினது அலுவல்களின் நிருவாகமும் முகாமையும், (இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் “சபை” எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்), பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டதுமான பணிப்பாளர்கள் சபையொன்றிற்கு உரித்தாக்கப் படுதல் வேண்டும்:-

(அ) சபையின் தவிசாளராகவிருக்க வேண்டியவரான இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர், அல்லது அவரது பிரதிநிதியாக அவரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆளொருவர்;

(ஆ) திறைசேரிச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதியாக அவரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆளொருவர்;

(இ) பணியகத்தின் தவிசாளரும் பணிப்பாளரொருவரும் அல்லது தமது பிரதிநிதிகளாக அவர்களினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆட்கள்; அத்துடன்

(ஈ) இச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அதிகாரசபையின் பதிவாளர்.

(2) சபை அதிகாரசபையின் அலுவல்களை நிருவகித்து முகாமை செய்யும் நோக்கத்துக்காக இச்சட்டத்தினால் அளிக்கப்பட்ட குறித்தளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட தத்துவங்களையும் கடமைகளையும் பணிப்புகளையும் பிரயோகித்தல் நிறைவேற்றுதல் மற்றும் புரிதல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் பதிவாளரானவர் சபையின் செயலாளராகவிருத்தல் வேண்டுமென்பதுடன், சபையின் எல்லாக் கூட்டங்களினதும் நிகழ்ச்சிக்குறிப்புகள் பற்றிய பதிவேடொன்றைப் பேணுவதற்குப் பொறுப்பாகவிருத்தலும் வேண்டும்.

சபையின் கூட்டங்கள்

**11.** (1) சபையானது ஒவ்வொரு காலாண்டிலும் ஆகக் குறைந்தது ஒரு தடவையாவது கூடுதல் வேண்டுமென்பதுடன், தவிசாளர் சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதலும் வேண்டும். தவிசாளர் சபையின் ஏதேனும் கூட்டத்துக்கு வருகைதராதிருப்பின், சமுகமளித்துள்ள உறுப்பினர்கள், அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்குவதற்குத் தம்முள்ளிருந்து உறுப்பினரொருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டுமென்பதுடன், சபையானது அதன் கூட்டங்களை நடாத்துவதற்கானதும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துவதற்கானதுமான நடவடிக்கை முறையை ஒழுங்கு படுத்துதலும் வேண்டும்.

(3) சபையின் ஏதேனும் கூட்டத்தில் முடிபு செய்யப்படுவதற்கான எல்லாக் கேள்விகளும் அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்துள்ள உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்கின்மூலம் முடிபுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் விடயத்தில், கூட்டத்துக்குத் தலைமைதாங்கும் தவிசாளர் அல்லது உறுப்பினர் அவருடைய வாக்குக்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) சபையின் ஏதேனும் செயல், நடவடிக்கை அல்லது முடிபு எதுவும், அதன் உறுப்பாண்மைக்கிடையே ஏதேனும் வெற்றிடம் இருக்கின்றமை காரணமாக மட்டும் அல்லது சபையின்

உறுப்பினரொருவரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்குப் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவரான எவரேனுமாளின் பெயர் குறித்தநியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருக்கின்றமை காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாக்கப்படுதலாகாது.

அதிசார சபையின் இலச்சினை

**12.** (1) அதிகாரசபையின் இலச்சினை சபையினால் தீர்மானிக் கப்படுதல் வேண்டுமென்பதுடன், அதனால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றவும்படலாம்.

(2) அதிகாரசபையின் இலச்சினை சபைச் செயலாளரின் கட்டுக் காப்பிலிருத்தல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் இலச்சினை, சபையின் வலுவளிப்புடனும் சபையின் தவிசாளரினதும் வேறோர் உறுப்பினரினதும் சமுகத்திலும் அன்றி, ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் தாம் சமுகமாயிருந்தனர் என்பதற்கத்தாட்சியாக அத்தகைய சாதனத்தில் அல்லது ஆவணத்தில் அவர்களின் பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும்.

(4) சபையின் செயலாளர், அதிகாரசபையின் இலச்சினை எந்தச் சாதனங்களிலும் ஆவணங்களிலும் பொறிக்கப் பட்டுள்ளதோ அந்த எல்லாச் சாதனங்களும் ஆவணங்களும் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

அதிகார சபையின் நிதியம்

**13.** (1) அதிகாரசபை அதன் சொந்த நிதியத்தைக் கொண்டி ருத்தல் வேண்டும்.

(2) பின்வருவன அதிகாரசபையின் நிதியத்துக்கு வரவு வைக் கப்படுதல் வேண்டும்:-

(அ) அதிகாரசபையின் பயன்பாட்டுக்காகப் பாராளு மன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப்பணத்தொகைகளும்;

(ஆ) அதிகாரசபையினால் அளிக்கப்பட்ட சேவைகள் தொடர்பில் விதிக்கப்பட்ட கட்டணங்களாக அல்லது விதிப்பனவுகளாகப் பெறப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(இ) எத்தகையதுமான எம்மூலத்திலிருந்தேனும் கடன்கள், நன்கொடைகள், கொடைகள் மற்றும் மானியக்கொடைகள் என்றவகையாக அதிகாரசபையினால் பெறப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) இச்சட்டத்தின்கீழான அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அதிகாரசபையினால் உறப்பட்ட செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்

**14.** (1) அதிகாரசபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) சபையானது, அதிகாரசபையின் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் வேறெல்லா நிதிசார் கொடுக்கல்வாங்கல்களும் பற்றி முறையான கணக்குப் புத்தகங்கள் வைத்திருக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், அதிகாரசபையின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தலுக்கும் அது தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் பாகம் II இன் ஏற்புடைமை

**15.** அதிகாரசபையின் நிதிசார் கட்டுப்பாட்டுக்கும் கணக்குகளின் பேணுகைக்கும் அவை தொடர்பிலும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் II இன் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

**16.** (1) அமைச்சர்; (இச்சட்டத்தில், "பதிவாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படுபவரும்), அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று அலுவலராகவிருக்கவேண்டியவரும், விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய தகைமைகளைக் கொண்டவருமான ஆளொருவரை இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அதிகாரசபை யின் பதிவாளராகவிருப்பதற்கு நியமித்தல் வேண்டும். பதிவாளர்

(2) பதிவாளர், இச்சட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட பதிவுகளுடன் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களினதும் பொதுவான மேற்பார்வைக்கும் இச்சட்டத் தினாலும் இச்சட்டத்தின்கீழும் அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும் மற்றும் நிறைவேற்றுவதற்கும் பொறுப்பாகவிருத்தல் வேண்டும். அதிகாரசபையின் அலுவலர் களினதும் ஊழியர்களினதும் நிருவாகக் கட்டுப்பாட்டுக்கும் அவர் பொறுப்பாகவிருத்தலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் பதிவாளருக்கு குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை கடமையை அல்லது பணியைப் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் அல்லது நிறைவேற்றுவதிலும் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட எதற்கும் அவர் ஆளாதலாகாது.

(4) அமைச்சர் அதற்காகக் குறித்தளிக்கப்பட்ட காரணங் களுக்காகவும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பதிவாளரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(5) பதிவாளர், சபையின் எழுத்திலான அங்கீகாரத்துடன் மற்றும் அவ்வாறு செய்வது அவசியமென அவர் கருதுகின்ற போதெல்லாம், இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை அதிகாரசபையின் எவரேனும் அலுவலருக்கு எழுத்துமூலம் கையளிக்கலாமென்பதுடன், அத்தகைய அலுவலர், பதிவாளரின் பொதுவான அல்லது விசேட பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, அத்தகைய தத்துவத்தை, கடமையை

அல்லது பணியைப் பிரயோகித்தலும் புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும் வேண்டும்.

அதிகார சபையின் பணியாட் டொகுதியினர்

**17.** (1) அதிகாரசபையானது, இச்சட்டத்தினாலான அல்லது இச்சட்டத்தின்கீழான அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் வினைத்திறனாகப் பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும், புரிவதற்கும் அது அவசியமெனக் கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்களையும் ஊழியர் களையும் நியமிக்கலாம்.

(2) அதிகாரசபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரின தும் அவ்வலுவலர் எந்த அமைச்சின்கீழ் தொழிலுக் கமர்த்தப்பட்டுள்ளாரோ அந்த அமைச்சுக்கான செயலாளரினதும், மற்றும் பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் சம்மதத்துடன், அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப் படலாம்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக் கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) அதிகாரசபை குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்காக அரசாங்கத்தில் சேவையாற்றுவதற்கு இணங்கியுள்ளவரான அரசாங்கத்துடன் ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ளவரான எவரேனு மாளை தொழிலுக்கமர்த்தியுள்ளவிடத்து, அவ்வாளினால் அதிகாரசபையுடன் சேவையாற்றிய ஏதேனும் காலப்பகுதியானது அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றுகின்ற நோக்கத்துக்காக அரசாங்கத்துக்காக சேவையாற்றியதாகக் கருதப் படுதல் வேண்டும்.

(6) அதிகாரசபையின் வேண்டுகோளின்பேரில், மாகாணப் பொதுச் சேவையின் எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினது இயைபான மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவினதும் சம்மதத்துடன் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரசபையின் பணியாட் டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

*அதிகார சபையின் பதிவாளருக்கும் அலுவலர் களுக்கும் ஊழியர் களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியம்*

**18.** அதிகாரசபையின் பதிவாளருக்கும் மற்றெல்லா அலுவலர் களுக்கும் ஊழியர்களுக்கும் அதற்கென ஆக்கப்பட்ட விதிகளின் மூலம் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஆன அத்தகைய ஊதியமும் வேறு படிகளும் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற் கென ஆக்கப்பட்ட விதிகளின்மூலம் சபையினால் தீர்மானிக் கப்படக்கூடியவாறான அத்தகைய சேவை நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அவர்கள் அமைந்தோராதலும் வேண்டும்.

## பாகம் III

## பிணைப்பொறுப்புரிமைகளை உருவாக்குதலும் திறத்தவர்களின் உரிமைகளும்

*ஒப்பந்தம் செய்து கொள்வதற் கான சுதந்திரம்*

**19.** (1) இச்சட்டத்தில் அல்லது வேறேதேனும் சட்டத்தில் வேறு வகையாக ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிர, பிணைப்பொறுப்பு உடன்படிக்கையொன்று, உடன்படிக்கைக்கான திறத்தவர் களுக்கிடையேயும் மூன்றாந் திறத்தவருக்கெதிராகவும் அதன் நியதிகளுக்கிணங்க பயனுறுவதாதல் வேண்டும்.

(2) வரும்படிகளிலான நிறைவாக்கப்பட்ட பிணைப் பொறுப்புரிமையொன்று, பிணைப்பொறுப்பு உடன்படிக்கை வரும்படிகள் பற்றிய ஒரு விவரணத்தைக் கொண்டிருக்கின்றதா அல்லதாவென்பதைப் பொருட்படுத்தாது, மூன்றாந் திறத் தவரொருவருக்கெதிராக வலுவுக்கிடற்பாலதாதல் வேண்டும்.

(3) பிணைப்பொறுப்பு உடன்படிக்கையொன்று எழுத்திலுள்ள விடத்து, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர், எழுத்திலான உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டதிலிருந்து பத்து நாட்களினுள் அதன் பிரதியொன்றைக் கடனாளியிடம் ஒப்படைத்தல் வேண்டு மென்பதுடன், கடனாளியினால் வேண்டுகோளொன்று விடுக்கப் பட்டபின்னர் பிணைப்பொறுப் பளிக்கப்பட்ட திறத்தவர் பிரதி யொன்றை ஒப்படைக்கத் தவறினால், கடனாளியினால் அதற்கெனச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மேல் நீதிவான் நீதிமன்றமொன்று, கடனாளியிடம் அத்தகைய பிரதியை ஒப்படைப்பதற்காகக் கட்டளை யொன்றை ஆக்குவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

*ஒரு பிணைப் பொறுப் புரிமையை உருவாக்குதல்*

**20.** (1) ஒரு மிதக்கும் தாக்கீடு என்ற தன்மையிலான ஒரு பிணைப் பொறுப்புரிமை உட்பட்ட பிணைப்பொறுப்புரிமையொன்று -

(அ) பெறுமதி கொடுக்கப்படும்போது;

(ஆ) கடனாளிக்குச் துணைமைப்பொருளில் உரிமைகள் உள்ளபோது அல்லது துணைமைப்பொருளிலான உரிமைகளை மூன்றாந் திறத்தவரொருவருக்குக் கைமாற்றுவதற்கான தத்துவத்தைக் கொண்டிருக் கும்போது; அத்துடன்

(இ) (i) துணைமைப்பொருளை அடையாளங் காண்பதனை இயலச் செய்வதற்குப் போதியதாகவுள்ள அதன் விவரணமொன்றைக் கொண்டுள்ளவோர் உடன் படிக்கையைக் கடனாளி கையொப்பமிட்டுள்ள போது; அல்லது

(ii) துணைமைப்பொருளானது பிணைப்பொறுப் பளிக்கப்பட்ட திறத்தவரின் அல்லது பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரின் சார்பில் வேறெவரேனும் ஆளின் உடைமையில் உள்ள போது.

பற்றுவதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், பிணைப்பொறுப்பு உடன்படிக்கைக்கான திறத்தவர்கள் உருவாக்கல் நேரத்தைப் பிற்போடுவதற்குக் குறிப்பாக உடன்பட்டுள்ளவிடத்து, பிணைப்பொறுப்புரிமை உடன்பட்டுக் கொள்ளப்பட்ட நேரத்தில் பற்றுவதாதல் வேண்டும்.

(3) பிணைப்பொறுப்புரிமையொன்று, (1) ஆம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறான முறையில் அது பற்றிலிருந்தா லொழிய, ஒரு மூன்றாந் திறத்தவருக்கெதிராக வலுவுக்கிடப் படற்பாலதாதலாகாது.

**21.** (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பிணைப்பொறுப்பு உடன்படிக்கையொன்று, அத்தகைய உடன்படிக்கையைச் செய்துகொண்ட பின்னர் கொள்ளப்பட்ட ஏதேனும் ஆதனத்தையும் மேவலாம்: உடன்படிக்கையின் பின்னர் கொள்ளப்பட்ட அசைவுள்ள ஆதனத்திலான பிணைப்பொறுப் புரிமை

ஆயின், உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்ட பின்னர் கொள்ளப்பட்ட ஆதனத்திலான பிணைப்பொறுப்புரிமை யொன்று, கடனாளி அத்தகைய ஆதனத்துக்கான உரிமையைக் கொள்ளும் வரை வலுவுக்கிடற்படற்பாலதான பிணைப்பொறுப்புரிமையாக வருதலாகாது.

(2) ஒரு பிணைப்பொறுப்பு உடன்படிக்கையைச் செய்து கொண்டபின்னர் கொள்ளப்பட்ட ஏதேனும் ஆதனத்தை மேவுவதாக அத்தகைய உடன்படிக்கையிலுள்ளவொரு வாசகத்தின்கீழ்–

(அ) அசைவற்ற ஆதனத்தின் குத்தகை, கொள்வனவு அல்லது ஈடு என்பவற்றுடன் இணைய கொடுக்கப்பட்ட பயிர் களிலான பிணைப்பொறுப்புரிமை, அவ்வாறு உடன் பட்டுக்கொள்ளப்படின், விடயத்துக்கேற்ப, அத்தகைய குத்தகை, கொள்வனவு அல்லது ஈட்டுக் காலத்தின்போது சம்பந்தப்பட்ட ஆதனத்தில் வளர்க்கப்பட்ட பயிர்களுக்கு உருவாக்கப்படலாமென்பது தவிர பிணைப்பொறுப்பு உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட பின்னர் ஓராண்டுக்கு மேற்பட்ட பயிர்களாக வருகின்ற அத்தகைய பயிர்கள் தொடர்பில்; அல்லது

(ஆ) (i) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர் பெறுமதி கொடுத்ததிலிருந்து பத்து நாட்களினுள் கடனாளி பாவனைப் பண்டங்களிலான உரிமைகளைக் கொள்ளுதல் செய்தாலொழியவும்; அல்லது

(ii) பாவனைசாராக் கொடுக்கல்வாங்கல் ஒன்றுக் காக, தனிப்பட்ட உத்தரவாதமொன்றுக்குப் பிணைப்பொறுப்பளிப்பதற்குக் கடனாளி அவரின் தனிப்பட்ட சொத்துக்களில் பிணைப்பொறுப் புரிமை யொன்றை வழங்கினாலொழியவும்,

சொத்து வளர்ச்சிகள் தவிர்ந்த பாவனைப் பண்டங்கள் தொடர்பில் பிணைப்பொறுப்புரிமையொன்று உருவாக்கப்படுதலாகாது.

எதிர்கால முற்பணங்கள்

**22.** பிணைப்பொறுப்பு உடன்படிக்கையொன்று எதிர்கால முற்பணங்களுக்குப் பிணைப்பொறுப்பளிப்பதற்கான ஏற்பாட்டைக் கொண்டிருக்கலாம்; ஆயின், அவ்வாறு முற்பணமாக வழங்கப் படக்கூடிய அதிகபட்சத்தொகை பிணைப்பொறுப்பு உடன் படிக்கையில் குறித்துரைக்கப்படுதல் வேண்டும்.

உடன்படிக்கையானது ஒரு சாட்டுணிக் கெதிராக எதிர்வாதத்தை நிலைநாட்டு தலாகாது

**23.** ஒரு கடனாளியின் விற்பனையாளர் அல்லது குத்தகை கொடுநருக்கெதிராக அத்தகைய கடனாளிக்குள்ள ஏதேனும் உரிமைக்கோரிக்கையை அல்லது எதிர்வாதத்தைச் சாட்டுணி ஒருவருக்கெதிராக நிலைநாட்டாதிருப்பதற்குக் கடனாளியினாலான உடன்படிக்கையொன்று, (82ஆம் அத்தியாயமான)

நாணயமாற்றுண்டியல்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் கை மாற்றத்தகு சாதனத்தை உரியதாய் உறப்பட்டு வைத்திருப்பவருக்கெதிராக நிலைநாட்டப்படக்கூடிய எவையேனும் எதிர்வாதங்கள் தவிர, நல்லெண்ணத்துடனும் அறிவித்தலின்றியும் பெறுமதிக்காக அத்தகைய சாட்டுகையை எடுக்கின்றவரான சாட்டுணியினால் வலுவுக்கிடப்படற்பாலதாகவிருத்தல் வேண்டும்.

பண்ட விற்பனை செய்தற் கட்டளைச் சட்டத்தின் ஏற்புடைமை

**24.** விற்பனை செய்யப்பட்ட எவையேனும் பண்டங்களில் கொள்ளுதற் பிணைப்பொறுப்புரிமையொன்றை ஒரு விற்பனை யாளர் தக்கவைத்திருக்குமிடத்து:-

(அ) (84ஆம் அத்தியாயமான) பண்ட விற்பனைக் கட்டளைச்சட்டமுட்பட விற்பனை ஒப்பந்தங்கள் தொடர்பான சட்டம், விற்பனையையும் விற்பனையாளரின் நிபந்தனைகளினதும் கட்டுறுத்துகளினதும் ஏதேனும் உரிமைத் துறப்பையும், வரையறுப்பையும் அல்லது திரிபுபடுத்துகையையும் ஆளுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) 23ஆம் பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிர, ஒரு விற்பனை உடன்படிக்கையிலான நிபந்தனைகளும் கட்டுறுத்துகளும் ஏதேனும் பிணைப்பொறுப்பு உடன்படிக்கையினால் பாதிக்கப்படுதலாகாது.

துரிதப்படுத்தல் வாசகங்கள்

**25.** துணைமைப்பொருள் இடையூறிலுள்ளது அல்லது பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர் காப்பற்றவராக உள்ளாரெனப் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர் கருதுமிடத்து, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர் கொடுப்பனவை அல்லது புரிகையைத் துரிதப்படுத்த பாதுகாப்பு உடன்படிக்கையொன்று ஏற்பாடுசெய்கின்றவிடத்து, கொடுப் பனவின் அல்லது புரிகையின் சாத்தியம் பாதிக்கப்பட்டுள்ளது அல்லது உடனடியாகப் பாதிக்கப்படவுள்ளது அல்லது துணைமைப்பொருள் இடையூறில் இடப்பட்டுள்ளது அல்லது உடனடியாக இடப்படவுள்ளது எனப் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர் நல்லெண்ணத்துடன் நம்புகின்ற மற்றும் நம்புவதற்கு

நியாயமான ஏதுக்கள் அவருக்குள்ள பட்சத்தில் மட்டுமே பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவருக்கு அவ்வாறு செய்வதற்கு உரிமையுண்டு எனப் பொருள்படுவதாக பாதுகாப்பு உடன்படிக்கை பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

பிணைப் பொறுப் பளிக்கப்பட்டவொரு திறத்தவரினால் துணைமைப் பொருளின் கட்டுக்காப்பும் பேணிக்காப்பும்

**26.** (1) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரொருவர், பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரின் உடைமையிலுள்ள ஏதேனும் துணைமைப்பொருளின் கட்டுக்காப்பிலும் பேணிக் காப்பிலும் நியாயமான கவனஞ்செலுத்துதல் வேண்டுமென்பது டன், வேறுவகையாக உடன்பட்டுக் கொள்ளப் பட்டிருந்தாலொழிய, தட்டுமுட்டுப்பொருட் பத்திரத்தின் அல்லது ஒரு சாதனத்தின் விடயத்தில், நியாயமான கவனம் என்பது, முற்றிறத்தவர்களுக் கெதிராக உரிமைகளைப் பேணிக்காப்பதற்கு அவசியமான நடபடிகளை எடுத்தலையும் உள்ளடக்கும்.

(2) வேறுவகையாக உடன்பட்டுக்கொள்ளப்பட்டாலொழிய, துணைமைப் பொருளொன்று பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரொருவரின் உடைமையில் இருந்தால்–

(அ) காப்புறுதிக்கான ஆகுசெலவும் வரிகளின் கொடுப்பனவும், துணைமைப்பொருளின் உடைமையைப் பெறுவதிலும் பேணுவதிலும் அதனைக் பேணிக்காப்பதிலும் உறப்பட்ட வேறு விதிப்பனவுகளும் உட்பட்ட நியாயமான செலவுகள், கடனாளிக்கு பொறுப்பிக்கப்படற் பாலனவாதல் வேண்டுமென்பதுடன், துணை மைப் பொருளால் பிணைப் பொறுப்பளிக்க வும்படுதல் வேண்டும்;

(ஆ) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரின் அசட்டை காரணமாக விளைவிக்கப்பட்டால் தவிர, ஏதேனும் இடர், இழப்பு அல்லது சேதம், ஏதேனும் காப்புறுதிக் காப்பீட்டிலான ஏதேனும் குறைவுபாட்டின் அளவுக்கு, கடனாளியைச் சார்ந்ததாதல் வேண்டும்;

(இ) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர், துணைமைப்பொருளிலிருந்து பெறப்பட்ட

பணம் தவிர, ஏதேனும் அதிகரிப்பை அல்லது எவையேனும் இலாபங்களை மேலதிகப் பிணைப்பொறுப்பாக வைத்திருக்கலாம் என்பதுடன், அவ்வாறு பெறப்பட்ட ஏதேனும் பணம் கடனாளிக்கு அனுப்பப்பட்டாலொழிய, பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கடப்பாட்டைக் குறைப்பதில் உடனடியாகப் பிரயோகிக் கப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(ஈ) அளிமாற்றான துணைமைப்பொருள் ஒன்றாய்க் கலந்திருப்பது எவ்வாறாயினும், பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர், துணை மைப்பொருள் அடையாளங்காணப்பட முடியுமானவொரு முறையில் வைத்திருத்தல் வேண்டும்.

(3) பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரொருவர் -

(அ) (1) ஆம் உட்பிரிவினால் அல்லது (2) ஆம் உட்பிரிவினால் சுமத்தப்பட்ட ஏதேனும் கடப்பாட்டை ஆற்ற அத்தகைய திறத்தவர் தவறியமையினால் விளைவிக்கப்பட்ட ஏதேனும் இழப்புக்காக அல்லது சேதத்துக் காக ஆளாதல் வேண்டும். ஆனால் துணைமைப்பொருளிலான பிணைப் பொறுப்புரிமையை இழத்தலாகாது; அத்துடன்

(ஆ) (4) ஆம் உட்பிரிவினால் அதிகாரமளிக்கப் பட்டவாறல்லாது வேறுவகையாக அத்தகைய திறத்தவர் துணைமைப்பொருளைப் பயன் படுத்தியமையினால் விளைவிக்கப்பட்ட ஏதேனும் இழப்புக்காக அல்லது சேதத்துக்காக ஆளாதல் வேண்டும்.

(4) பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரொருவர் துணைமைப்பொருளை பின்வருமாறு பயன்படுத்தலாம்:-

(அ) பிணைப்பொறுப்பு உடன்படிக்கையில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையிலும் அளவுக்கும்;

(ஆ) துணைமைப்பொருளை அல்லது அதன் பெறுமதியைப் பேணிக்காக்கும் நோக்கத் துக்காக; அல்லது

(இ) ஒரு நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்கிணங்க.

*பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட உடன்படிக்கை பற்றித் தகவல் பெறுதல்*

**27.** (1) கடனாளி அல்லது கடனாளியின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர், பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவருக்குக் கொடுக்கப்பட்ட எழுத்திலான அறிவித்தல்மூலம், பின்வருவன வற்றை அத்தகைய ஆளுக்குக் கொடுத்துதவும்படி அத்தகைய பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரைத் தேவைப்படுத்த லாம்:-

(அ) அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட தேதி யன்றுள்ளவாறாக, கடன்பாட்டுத் தொகை யையும் அதன் கொடுப்பனவு நியதிகளும் பற்றிய எழுத்திலான கூற்றொன்று;

(ஆ) அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள நிரலொன்றிற் குறித்துரைக்கப்பட்டவாறாக துணைமைப்பொருள் அல்லது அதன் பாகம் பற்றிய கூற்றொன்றை, அத்தகைய அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட தேதியன்றுள்ளவாறாக அங்கீகரிக்கின்ற அல்லது திருத்துகின்ற எழுத்திலான கூற்றொன்று;

(இ) கடன்பாட்டுத்தொகை மற்றும் அதன் கொடுப்பனவு நியதிகள் பற்றிய கூற்றொன்றை, அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட தேதி யன்றுள்ளவாறாக அங்கீகரிக்கின்ற அல்லது திருத்துகின்ற எழுத்திலான கூற்றொன்று; அல்லது

(ஈ) பிணைப்பொறுப்பு உடன்படிக்கையின் உண்மைப்பிரதி.

(2) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர் ஒரு நம்பிக்கைப் பொறுப்புச் சட்டமுறையாவணத்தின்கீழ் நம்பிக்கைப் பொறுப்பாளராகவிருக்குமிடத்து, (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது.

(3) கடனாளியினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட துணைமைப்பொருள் எல்லாவற்றிலும் அல்லது குறிப்பிட்ட வகையினதான துணைமைப்பொருள் எல்லாவற்றினதும் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர் பிணைப்பொறுப்புரிமை யொன்றை உரிமைகோரினால், பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர், (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழான அறிவித்தலுடன் இணைக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட அத்தகைய துணைமைப்பொருள் பற்றிய நிரலை அங்கீகரிப்பதற்கு அல்லது திருத்துவதற்குப் பதிலாக, அத்தகைய நிகழ்வைச் சுட்டிக்காட்டலாம்.

(4) ஆறாம் உட்பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கட்டணக் கொடுப்பனவு செய்வதற்கமைய, பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர், (1) ஆம் உட்பிரிவின்கீழான அறிவித்தலொன்று பெறப்பட்டதிலிருந்து பதினைந்து நாட்களினுள் வழங்கப்பட்ட அவ்வறிவித்தலுக்குப் பதிலளித்தல் வேண்டு மென்பதுடன், நியாயமான காரணமின்றி:-

(அ) பதினைந்துநாட் காலப்பகுதியினுள் பதிலளிக்கத் தவறினால், பிணைப்பொறுப் பளிக்கப்பட்ட திறத்தவர், அவ்வுட்பிரிவின் கீழ் தகவல் பெறுவதற்கு உரித்துள்ள எவரேனு மாளுக்கு அதன்மூலம் விளைவிக்கப்பட்ட ஏதேனும் இழப்பு அல்லது சேதத்துக்காக ஆளாதலும் வேண்டும்; அல்லது

(ஆ) பூரணமற்ற அல்லது பிழையான ஏதேனும் பதிலைக் கொடுத்தால், பிணைப்பொறுப் பளிக்கப்பட்ட திறத்தவர், அத்தகைய பதிலின்மீது நம்பியிருப்பதற்கு நியாயமான

முறையில் எதிர்பார்க்கப்படக்கூடிய எவரேனுமாளுக்கு அதன்மூலம் விளைவிக்கப்பட்ட ஏதேனும் இழப்பு அல்லது சேதத்துக்காக ஆளாதலும் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழான அறிவித்தலொன்றைப் பெறுகின்றவரான ஆளொருவர், அவ்வறிவித்தலின் விடயப் பொருளாகவுள்ள கடனாளியின் கடப்பாட்டில் அல்லது ஆதனத்தில் மேற்கொண்டு அக்கறையொன்றைக் கொண்டிராதவிடத்து, அத்தகைய ஆள், அத்தகைய அறிவித்தல் பெறப்பட்டதிலிருந்து பதினைந்து நாட்களினுள், அத்தகைய அக்கறைக்கு உடனடுத் துறுபவரின் மற்றும் அறியப்படின், அத்தகைய அக்கறைக்கான மிகப்பிந்திய அடுத்துறுபவரின் பெயரையும் முகவரியையும் வெளிவிடுதல் வேண்டும். அத்தகைய ஆள் நியாயமான காரணமின்றி அத்தகைய வெளிவிடுகையைச் செய்யத்தவறினால், வேண்டுகோளை விடுக்கும் ஆள், இச்சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்படக்கூடிய வேறேதேனும் பரிகாரத்துடன் சேர்த்து மேலதிகமாக, அவ்வேண்டுகோளுக்கு இணங்கியொழுகுவதற்கான கட்டளையொன்றுக்காக 28ஆம் பிரிவின்கீழ் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிப்பதற்கு உரித்துடை யவராதல் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழ் எவ்வாளுக்கு வேண்டுகோள் விடுக்கப்படுகின்றதோ அவ்வாள் ஒருவர், விடுக்கப்பட்ட ஒவ்வொரு வேண்டுகோளுக்காகவும் விதித்துரைக்கப்பட்ட கட்டணமொன்றை முன்கூட்டியே கொடுப்பனவு செய்வதனைத் தேவைப்படுத்தலாம். எவ்வாறாயினும், கடனாளியொருவர், ஆறு மாதங்களுக்கொரு தடவை விதிப்பனவின்றிப் பதிலொன்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

இணங்கியொழுகுகைக் கட்டளையொன்றை வழங்குவதற்கு நீதிமன்றத்துக்குள்ள தத்துவம்

**28.** (1) நியாயாதிக்கங்கொண்டுள்ள நீதிவான் நீதிமன்றமொன்று, அதற்கெனச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது, பின்வருவனவற்றுக்கான கட்டளையொன்றை ஆக்குவதற்குத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) 27ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் அறிவித்தலொன்றைப் பெறுகின்ற பிணைப்

பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரை அல்லது ஆளை அத்தகைய அறிவித்தலின் மூலம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்கி யொழுகும்படி தேவைப்படுத்தி;

(ஆ) 27 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் கீழ் கொடுக்கப்பட்ட அறிவித்தலுக்கு இணங்கி யொழுகுவதிலிருந்து ஒன்றில் முழுமையாக அல்லது பகுதியளவில் பிணைப்பொறுப் பளிக்கப்பட்ட திறத்தவருக்கு விலக்களித்து;

(இ) 27 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலுக்கு இணங்கியொழுகுவதற்காக வழங்கப்பட்ட காலத்தை நீடித்து; அல்லது

(ஈ) சூழ்நிலைகளில் அது நீதியானதெனக் கருது கின்றவாறு.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நீதிவானொருவரினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுடன் இணங்கியொழுக தவறுகின்றவரான எவரேனுமாள், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றவராதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஐநூறாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டுக்கு மேற்படாத காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

## பாகம் IV

### நிறைவாக்குதல்

**29.** (1) இச்சட்டத்தின் 4ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரினால் அல்லது பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரின் சார்பில் வேறு எவரேனுமாளினால் துணைமைப்பொருளின் உடைமை, பின்வரு வனவற்றிலான பிணைப்பொறுப்புரிமையை நிறைவாக்கும்:- *பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட உரிமையை நிறைவாக்குதல்*

(அ) தட்டுமுட்டுபொருட் பத்திரம்;

(ஆ) பண்டங்கள்;

(இ) ஒரு சாதனம்;

(ஈ) சான்றுப்படுத்தப்பட்டவொரு பிணைப் பொறுப்பு; அத்துடன்

(உ) பணம்.

(2) இச்சட்டத்தின் பாகம் VI இன் கீழ் ஒரு பிணைப் பொறுப்புரிமையைப் பதிவுசெய்தலானது, எவ்வகையினதுமான துணைமைப்பொருளையும் நிறைவாக்குதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, துணைமைப் பொருளானது பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரின் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியின் உடைமைக்கும் கட்டுக்காப்புக்கும் உள்ளமையாக ஒப்படைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர் அத்தகைய துணைமைப்பொருள் தொடர்பில் அதன் உரிமைகளை வலுவுக்கிடுவதற்கு நாடும் அத்தகைய காலம்வரை, உள்ளமையாகவும், வெளித்தோற்றமளவிலும், நல்லெண்ணத்துடனும் அத்தகைய உடைமையில் தொடர்ந்திருத்தலும் வேண்டும்.

தற்காவிக நிறைவாக்கம்

**30.** (1) (அ) (i) ஒரு விற்பனை நோக்கத்துக்காக அல்லது கொடுத்து மாற்றுகைக்காக;

(ii) முன்னிடுகை, சேகரிப்பு அல்லது புதுப்பிப்பு நோக்கத்துக்காக; அல்லது

(iii) ஒரு கைமாற்றுகையின் பதிவு நோக்கத்துக்காக,

பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர் கடனாளிக்கு ஒப்படைக்கும் ஒரு சாதனத்திலான அல்லது சான்றிதழிலான; அல்லது

(ஆ) (i) ஒரு விற்பனை நோக்கத்துக்காக அல்லது கொடுத்து மாற்றுகைக்காக;

(ii) ஏற்றுகை, தரையிறக்குகை, களஞ்சியப் படுத்துகை, கப்பற்படுத்துகை அல்லது சரக்கூடுமாற்றுகை நோக்கத்துக்காக; அல்லது

(iii) பண்டங்களின் விற்பனை அல்லது கொடுத்து மாற்றுகைக்கு முன்னர், அவற்றின் உற்பத்தி, பதனிடுகை, பொதியிடுகை அல்லது வேறெந்தமுறையிலுமான கையாளுகை நோக்கத்துக்காக,

ஒரு கைமாற்றத்தகு உரித்தாவணத்திலான அல்லது கைமாற்றத்தகு உரித்தாவணமொன்றினால் மேவப்படாதவையும் ஒப்படைபெறுநரினால் வைத்திருக்கப்படுபவையுமான பண்டங்களிலான (இவ்வுரித்தாவணத்தை அல்லது பண்டங்களைப் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர் கடனாளிக்குக் கிடைக்கக்கூடியனவாக்குகின்றார்), உடைமையின் மூலம் நிறைவாக்கப்பட்ட பிணைப்பொறுப்புரிமையொன்று, துணைமைப் பொருளானது கடனாளியின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தபின்னர் முதல் பத்துநாட்களின் போது நிறைவாக்கப்பட்டதாகவிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட பத்துநாட் காலப்பகுதி முடிவுறுவதன்மேல், சம்பந்தப்பட்ட பிணைப் பொறுப்புரிமை, ஒரு பிணைப்பொறுப்புரிமையை நிறைவாக்குதலுக்காக ஏற்பாடுசெய்கின்ற இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைந்ததாக வருதல் வேண்டும்.

வரும்படிகள் தொடர்பான நிறைவாக்கம்

**31.** (1) ஒரு துணைமைப்பொருளின் கையாளுகையானது வரும்படிகளை ஏற்படுத்துமிடத்து, அத்தகைய துணைமைப் பொருளிலான பிணைப்பொறுப்புரிமை-

(அ) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர், துணைமைப்பொருளின் பிணைப்பொறுப் புரிமையற்ற கையாளுகைக்கு வெளிப்படையாக அல்லது உட்கிடையாக அதிகாரமளித்தாலொழிய, தொடர்ந்திருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) வரும்படிகள் பிணைப்பொறுப்பு உடன்படிக்கையினால் மேவப்படாதபோதிலுங்கூட, அவற்றுக்குத் தன்னியக்கமாகவே நீடித்தல் வேண்டும்.

(2) துணைமைப்பொருள் மற்றும் வரும்படிகள் ஆகிய இரண்டுக்குமெதிராகப் பிணைப்பொறுப்புரிமையொன்றை பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர் வலுவுக்கிட்டால், துணைமைப்பொருளிலும் வரும்படிகளிலும் பிணைப் பொறுப்புரிமையினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட தொகை, கையாளுகைத் தேதியில் துணைமைப்பொருளின் சந்தைப் பெறுமதிக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்.

(3) வரும்படிகளிலான பிணைப்பொறுப்புரிமை, வரும்படிகள் ஏற்பட்டபோது, துணைமைப்பொருளிலான அக்கறை நிறைவாக்கப்பட்டிருப்பின், தொடர்ச்சியாக நிறைவாக்கப்பட்ட பிணைப்பொறுப்புரிமையாகவிருத்தல் வேண்டும்.

(4) மூலத் துணைமைப்பொருளிலான பிணைப்பொறுப்புரிமையொன்று பதிவுமூலமாகவல்லாது வேறுவகையாக நிறைவாக்கப்படுமிடத்து, வரும்படிகளிலான பிணைப்பொறுப்புரிமை இச்சட்டத்தின்கீழ் நிறைவாக்கப்பட்டாலொழிய, வரும்படிகளிலான அக்கறையைக் கடனாளி கொள்ளுதல் செய்வதிலிருந்து பத்து நாட்களுக்குப்பின்னர் வரும்படிகளிலான பிணைப்பொறுப்புரிமை நிறைவாக்கமற்றதாக வருதல் வேண்டும்.

பண்டங்கள் ஓர் ஒப்படை பெறுநரினால் வைத்திருக்கப் படுமிடத்தான நிறைவாக்கம்

**32.** (1) இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பண்டங்களை மேவிக் கைமாற்றத்தகு உரித்தாவணமொன்றை வழங்கியுள்ளவரான ஒப்படை பெறுநரின் உடைமையிலுள்ள பிணைப்பொறுப்புரிமை, அவ்வாவணத்திலுள்ள பிணைப் பொறுப்புரிமையை நிறைவாக்குவதன்மூலம் நிறைவாக்கப்படுவதுடன், அத்தகைய பண்டங்கள் அவ்வாறு மேவப்பட்டிருக்கையில் வேறுவகையாக நிறைவாக்கப்பட்ட அவற்றிலான ஏதேனும் பிணைப்பொறுப்புரிமை, அத்தகைய கைமாற்றத்தகு உரித்தாவணத்திலுள்ள நிறைவாக்கப்பட்ட பிணைப்பொறுப்புரிமைக்கு அமைந்ததாக வருதலும் வேண்டும்.

(2) கடனாளி, கடனாளியின் முகவர் அல்லது (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒப்படைபெறுநர் தவிர்ந்த வேறு

ஆளொருவரின் உடைமையிலுள்ள துணைமைப்பொருளிலான பிணைப்பொறுப்புரிமை பின்வருவனவற்றின் மூலம் நிறை வாக்கப்படலாம்:-

(அ) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரின் பெயரில் உரித்தாவணமொன்றை வழங்குவதன் மூலம்;

(ஆ) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட ஆளின் சார்பிலான உடைமைமூலம்; அல்லது

(இ) பதிவுமூலம்.

திருப்பிக் கொடுக்கப்பட்ட, கைப்பற்றப்பட்ட அல்லது மீள் உடைமை கொள்ளப்பட்ட பண்டங்களின் நிறைவாக்கமும் முன்னுரிமையும்

**33.** (1) பிணைப் பொறுப்புரிமையொன்றுக்கு அமைந்தன வாகவுள்ள பண்டங்களைக் கடனாளி விற்பனைசெய்யுமிடத்து அல்லது குத்தகைக்கு கொடுக்குமிடத்து, பின்வருமாறாயின் பிணைப்பொறுப்புரிமை பண்டங்களை மீளப் பற்றுவதாதல் வேண்டும்:-

(அ) வாங்குநர் அல்லது குத்தகைபெறுநர், 31 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் அல்லது 34 ஆம் பிரிவின் (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவுகளின் கீழ் பிணைப் பொறுப்புரிமையற்றனவாகப் பண்டங்களை எடுத்திருப்பின்; அத்துடன்

(ஆ) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடப்பாடு செலுத்தப் படாதிருப்பின் அல்லது புரியப்படாதிருப்பின்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட சூழ்நிலைகளில் பண்டங்களிலான பிணைப்பொறுப்புரிமை மீளப்பற்றுமிடத்து:-

(அ) பண்டங்களிலான பிணைப்பொறுப்புரிமை நிறை வாக்கப்பட்டுள்ளதா அல்லது இல்லையா; அத்துடன்

(ஆ) அது நிறைவாக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட நேரம்

என்பன பற்றிய ஏதேனும் கேள்வி, அப்பண்டங்கள் விற்பனை செய்யப்பட்டிருக்கவில்லை அல்லது குத்தகைக்குக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை என்றாற்போன்று தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) பண்டங்களின் விற்பனை அல்லது குத்தகை ஒரு கணக்கை அல்லது தட்டுமுட்டுபொருட் பத்திரத்தை உருவாக்குவதுடன் கணக்கு அல்லது தட்டுமுட்டுப்பொருட் பத்திரம் பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரொருவருக்குக் கைமாற்றப்பட்டு விற்பனையாளரினால் அல்லது குத்தகைகொடுநரினால் பண்டங் கள் திருப்பிக்கொடுக்கப்படுமிடத்து அல்லது மீள் உடைமை கொள்ளப்படுமிடத்து, கணக்கின் அல்லது தட்டுமுட்டுப் பொருட் பத்திரத்தின் கைமாற்றுணி அத்தகைய பண்டங்களில் பிணைப் பொறுப்புரிமையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் எழுகின்ற பண்டங்களிலான பிணைப்பொறுப்புரிமை, கணக்கிலான அல்லது தட்டுமுட்டுப் பொருட் பத்திரத்திலான பிணைப்பொறுப்புரிமை நிறை வாக்கப்பட்டிருப்பினும் நிறைவாக்கப்படுகின்றது, ஆனால் பண்டங்கள் திருப்பிக்கொடுக்கப்பட்ட அல்லது மீள்உடைமை கொள்ளப்பட்ட பின்னர் பத்துநாட்காலப்பகுதி முடிவுறுமுன்னர் பிணைப்பொறுப்புரிமை தொடர்பில் கைமாற்றுணி நிதியளிப்புக் கூற்றொன்றைப் பதிவுசெய்தாலொழிய அல்லது பண்டங்களின் உடைமையை எடுத்தாலொழிய, அக்காலப்பகுதி முடிவுறு வதன்மேல் நிறைவாக்கமற்றதாக வருதல் வேண்டும்.

(5) பண்டங்கள் தொடர்பாகக் கைமாற்றுணியின் முன்னுரி மையைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக, கணக்கொன்றின் கைமாற்றம்பெறுநர் (3) ஆம் மற்றும் (4)ஆம் உட்பிரிவுகளின்கீழ் பண்டங்களிலான நிறைவாக்கப்பட்ட பிணைப் பொறுப்புரிமையைப் பெற்றால், கணக்கிலான கைமாற்றுணியின் பிணைப்பொறுப்புரிமை நிறைவாக்கப்பட்ட நேரத்தில் கைமாற்றுணி பண்டங்களிலான பிணைப்பொறுப்புரிமையை நிறைவாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

(6) தட்டுமுட்டுப்பொருட் பத்திரத்தின் கைமாற்றுணி (3) ஆம் மற்றும் (4)ஆம் உட்பிரிவுகளின்கீழ் பண்டங்களிலான நிறைவாக்கப்பட்ட பிணைப்பொறுப்புரிமையைப் பெறுமிடத்து, அப்போது:-

(அ) கைமாற்றுணிக்கும் (1)ஆம் உட்பிரிவின்கீழ் பற்றுநிற்கும் நிறைவாக்கப்பட்ட பிணைப் பொறுப்புரிமையை வைத்திருப்பவருக்கும் இடையே, தட்டுமுட்டுபொருட்

பத்திரத்துக்கு முன்னுரிமை கொண்டிருந்த ஆள் பண்டங்களுக்கும் முன்னுரிமை கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) பண்டங்கள் தொடர்பாகக் கைமாற்றுணியின் முன்னுரிமையைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக, கைமாற்றுணிக்கும் (1)ஆம் உட்பிரிவின்கீழ் பற்றுநிற்கும் நிறைவாக்கப்பட்ட பிணைப்பொறுப்புரிமையை வைத்திருப்பவர் தவிர்ந்த ஆளொருவருக்கும் இடையே, தட்டுமுட்டுப்பொருட் பத்திரத்தில் கைமாற்றுணியின் பிணைப்பொறுப்புரிமை நிறைவாக்கப்பட்ட நேரத்தில் கைமாற்றுணி பண்டங்களிலான பிணைப் பொறுப் புரிமையை நிறைவாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

**34.** (1) தொழிலின் சாதாரண நெறியில் பண்டங்களை விற்பனைசெய்கின்றவரான விற்பனையாளரிடமிருந்து பண்டங் களின் வாங்குநர், அது நிறைவாக்கப்பட்டு வாங்குநர் அதுபற்றி அறிந்துள்ள போதிலுங்கூட, விற்பனையானது பிணைப்பொறுப்பு உடன்படிக்கையின் மீறுகையொன்றாக அமைந்திருந்ததென்று வாங்குநர் அறிந்திருந்தாலொழிய, விற்பனையாளரினால் கொடுக்கப்பட்டவாறு அதன்கண் ஏதேனும் பிணைப் பொறுப்புரிமையற்றனவாக அவற்றை எடுக்கின்றார். *தொழிலின் சாதாரண நெறியிலான கொடுக்கல் வாங்கல்.*

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள்-

(அ) வாங்குநர் பண்டங்களின் உடைமையை எடுத்திருப் பினுஞ்சரி அல்லதாயினுஞ்சரி;

(ஆ) விற்பனையாளர் எந்நேரத்திலேனும் பண்டங்களின் உடைமையைக் கொண்டிருப்பினுஞ்சரி அல்லதா யினுஞ்சரி;

(இ) பண்டங்களுக்கான உரித்து வாங்குநரைச் சென்றடைந்திருப்பினுஞ்சரி அல்லதாயினுஞ் சரி; அல்லது

(ஈ) விற்பனையாளர் பண்டங்களில் பிணைப் பொறுப்புரிமையை எடுத்திருப்பினுஞ்சரி அல்லதாயினுஞ்சரி

ஏற்புடையற்பாலனவாக வருதல் வேண்டும்.

(3) தொழிலின் சாதாரணநெறியில் பண்டங்களைக் குத்தகைக்குக்கொடுக்கின்றவரான குத்தகைகொடுநரொருவரාலான பண்டங்களின் குத்தகையில், குத்தகைபெறுநரும் குத்தகையானது பிணைப்பொறுப்பு உடன்படிக்கையின் மீறுகையாக அமைந்ததென்று அறிந்திருந்தாலொழிய, குத்தகை பெறுநர் பண்டங்களில் ஏதேனும் பிணைப்பொறுப்பு உரிமையில்லாது குத்தகைகொடுநரால் வழங்கப்பட்ட குத்தகையின்கீழ் குத்தகை பெறுநரின் உரிமைகளின் அளவுக்கு குத்தகைபெறுநர் பண்டங்களை வைத்திருத்தல் வேண்டும்.

(4) (அ) குத்தகைபெறுநர் பண்டங்களின் உடைமையை எடுத்திருப்பினுஞ்சரி அல்லதாயினுஞ்சரி; அல்லது

(ஆ) குத்தகைகொடுநர் எந்நேரத்திலும் பண்டங்களை உடைமையில் வைத்திருந்திருப்பினுஞ்சரி அல்லதாயினுஞ்சரி,

(3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) தொழிலின் சாதாரண நெறியில் தட்டுமுட்டுப்பொருட் பத்திரத்தை உடைமைகொண்டு புதிய பெறுமதி கொடுக்கின்றவரான அதன் கொள்வனவாளர் ஒருவர்-

(அ) உடைமை கொண்ட நேரத்தில் தட்டுமுட்டுப்பொருட் பத்திரம் ஒரு பிணைப்பொறுப்புரிமைக்கு அமைந்ததாக விருந்ததெனக் கொள்வனவாளர் அறியாதிருப்பின், பதிவுமூலம் நிறைவாக்கப்பட்ட; அல்லது

(ஆ) கொள்வனவாளர் அறிந்திருந்த அளவு எத்தகைய தாகவிருப்பினும், 31 ஆம் பிரிவின்கீழ் பொருட்பதிவே டொன்றின் வரும்படிகளுடன் பற்றிநின்ற,

அதிலான ஏதேனும் பிணைப்பொறுப்புரிமையின்மீது முன்னுரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

(6) ஒரு சாதனமாக அல்லது கைமாற்றத்தகு உரித்தாவணமாக உள்ள துணைமைப்பொருளின் கொள்வனவாளரொருவர், அக் கொள்வனவாளர்-

(அ) கொள்வனவு செய்யப்பட்ட துணைமைப் பொருளுக்காகப் பெறுமதி கொடுத்திருந்தால்;

(ஆ) துணைமைப் பொருளை பிணைப்பொறுப் புரிமையொன்றுக்கு அமைந்ததாகவிருந்த தென அறியாமல் அதனைக் கொள்வனவு செய்தி ருந்தால்; அத்துடன்

(இ) துணைமைப்பொருளின் உடைமையை எடுத்திருந்தால்,

பதிவுமூலம் அதன்கண் நிறைவாக்கப்பட்ட அல்லது 31 ஆம் அல்லது 32 ஆம் பிரிவின்கீழ் தற்காலிகமாக நிறைவாக்கப்பட்ட ஏதேனும் பிணைப்பொறுப்புரிமையின்மீது முன்னுரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

**35.** (அ) (82ஆம் அத்தியாயமான) நாணய மாற்றுண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் பொருளுக்குட்பட்ட ஓர் உண்டியலை, பத்திரத்தை அல்லது காசோலையை உரியதாய் உறப்பட்டு வைத்திருக்கின்றவரான; அல்லது — *கைமாற்றத்தகு சாதனங்கள் முதலியன*

(ஆ) கடனாளியிடமிருந்து பணத்தின் கைமாற்றுணியாக விருக்கின்றவரான,

ஆளொருவரின் உரிமைகள் இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளினால் பாதிக்கப்படலாகாது.

## பாகம் V

### முன்னுரிமைகள்

*முன்னுரிமையை ஆளுகின்ற பொதுவான விதிகள்*

**36.** (1) பின்வரும் பொதுவான முன்னுரிமை பற்றிய விதிகள், அதே துணைமைப்பொருளிலுள்ள பிணைப் பொறுப்புரிமைகளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்:-

(அ) நிறைவாக்கற்றேதியைப் பொருட்படுத்தாது, பதிவு மூலம் நிறைவாக்கப்பட்ட பிணைப் பொறுப்புரிமைகளுக்கிடையேயான முன்னுரிமை, பதிவுத் தேதிமூலம் தீர்மானிக்கப் படுதல் வேண்டும்;

(ஆ) பதிவுமூலம் நிறைவாக்கப்பட்ட பிணைப் பொறுப்புரிமைக்கும் உடைமையின் மூலம் நிறைவாக்கப்பட்ட பிணைப்பொறுப்புரிமைக் கும் இடையேயான முன்னுரிமை, நிதியளிப்புக் கூற்று உடைமைக்குமுன்னர் பதிவுசெய்யப் பட்டதா வென்பதன் மூலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) நிறைவாக்கப்படாத பிணைப்பொறுப்புரிமை களுக்கிடையேயான முன்னுரிமை, அத்தகைய

பிணைப்பொறுப்புரிமை உருவாக்கப்பட்ட தேதியின்மூலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக-

(அ) தொடர்ச்சியாக நிறைவாக்கப்பட்ட பிணைப் பொறுப்புரிமை, எம்முறையின்மூலம் அது தொடக்கத்தில் நிறைவாக்கப்பட்டதோ அம்முறையின்மூலம் நிறைவாக்கப்பட்டதாக எல்லா நேரங்களிலும் கணிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) மூலத் துணைமைப்பொருளில் ஒரு பிணைப் பொறுப்புரிமை பதிவுசெய்யப்பட்ட, உடைமை கொள்ளப்பட்ட அல்லது நிறைவாக்கப்பட்ட நேரம், அதன் வரும்படிகளில், பிணைப் பொறுப்புரிமையின் அத்தகைய பதிவு செய்யப்பட்ட, உடைமை கொள்ளப்பட்ட அல்லது நிறைவாக்கப்பட்ட நேரமாகவிருத்தல் வேண்டும்.

(3) பிணைப்பொறுப்புரிமையொன்றின் கைமாற்றுணி, கைமாற்றிய நேரத்தில் கைமாற்றுநருக்கிருந்த பிணைப் பொறுப்புரிமை தொடர்பில் அதே முன்னுரிமையைக் கொள்ளுதல் வேண்டும்.

(4) ஐந்தாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, (1) ஆம் உட்பிரிவின்கீழ் பிணைப்பொறுப்புரிமைக்குள்ள முன்னுரிமை, எதிர்கால முற்பணங்கள் எல்லாவற்றுக்கும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(5) நிறைவாக்கப்பட்ட பிணைப்பொறுப்புரிமையொன்று, 5 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடு

செய்யப்பட்ட தீர்ப்புக் கடன்கொடுநரொருவரின் அக்கறையின் மேலாக, பின்வருவனவற்றின் அளவுவரை மட்டுமே முன்னுரிமை கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) அப்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தீர்ப்புப்பற்றிய அறிவித்தலைத் தீர்ப்புக் கடன்கொடுநர் பதிவுசெய்ய முன்னர் கொடுக்கப்பட்ட முற்பணங்கள்;

(ஆ) அப்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தீர்ப்புப்பற்றிய அறிவித்தல் பதிவுசெய்யப்பட்டமை பற்றி பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர் அறியுமுன்னர் கொடுக்கப்பட்ட முற்பணங்கள்;

(இ) கடனாளி தவிர்ந்த ஆளொருவருக்குப் போகுமதியானதும், (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவைப் பெறமுன்னர் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரினால் செய்துகொள்ளப்பட்டதுமான நியதிச்சட்ட முறையான தேவைப்பாட்டுக்கு அல்லது சட்டப்படி பிணிக்கின்ற கடப்பாட்டுக்கு இணங்கக் கொடுக்கப்பட்ட முற்பணங்கள்; அத்துடன்

(ஈ) துணைமைப்பொருளின் பாதுகாப்பு, பேணிக்காப்பு, பேணுகை அல்லது திருத்தத்துக்காகப் பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரினால் உறப்பட்ட நியாயமான ஆகுசெலவுகளும் செலவுகளும்.

கொள்ளுதற் பிணைப் பொறுப்புரிமைகளின் முன்னுரிமை

**37.** (1) பொருட்பதிவேட்டில் அல்லது அதன் வரும்படிகளிலான கொள்ளுதற் பிணைப்பொறுப்புரிமை யொன்று, பின்வருமாறாயின், அதே கடனாளியினால் கொடுக்கப்பட்ட அதே துணைமைப்

பொருளில் வேறேதேனும் பிணைப்பொறுப்புரிமையைப் பார்க்கிலும் முன்னுரிமை கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பொருட்பதிவேட்டின் உடைமையைக் கடனாளி பெற்ற நேரத்தில் அல்லது கடனாளியின் வேண்டுகோளின் பேரில் மூன்றாந் திறத் தவரொருவர் பொருட்பதிவேட்டை பெற்ற அல்லது அதன் உடைமையை வைத்திருந்த நேரத்தில் கொள்ளுதற் பிணைப்பொறுப்புரிமை நிறைவாக்கப்பட்டிருப்பின்;

(ஆ) கடனாளி பொருட்பதிவேட்டின் உடைமையைப் பெறுமுன்னர், கொள்ளுதற் பிணைப்பொறுப் புரிமை பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரினால் பதிவுசெய்யப்பட்ட தேதிக்குமுன்னர் துணைமைப் பொருளைப் பின்வருமாறாக அல்லது பின்வருவன வற்றை உள்ளடக்குகின்றதாக விவரிக்கின்ற நிதியளிப்புக் கூற்றொன்றைப் பதிவுசெய்துள்ளவரான வேறொவ்வொரு பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவருக்கும் கொள்ளுதற் பிணைப் பொறுப்புரிமையின் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர், எழுத்தில் அறிவித்தல் கொடுத்திருப்பின்:-

(i) சகல அல்லது அவற்றுட் சில, கொள்ளுதற் பிணைப்பொறுப்புரிமைக்கு அமைந் ததாகவிருக்கும் பொருட்பதிவேட்டின் அதே இனங்களாக அல்லது வகைகளாகவுள்ள பொருட்பதிவேட்டு இனங்கள் அல்லது வகைகள்;

(ii) பொருட்பதிவேடு; அல்லது

(iii) கணக்குகள்; அத்துடன்

(இ) பந்தி (ஆ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிவித்தலைக் கொடுக்கின்ற ஆள், கடனாளியின் பொருட் பதிவேட்டை இனத்தின்மூலம் அல்லது வகையின் மூலம் விவரித்து, அத்தகைய பொருட்பதிவேட்டில் கொள்ளுதற் பிணைப்பொறுப்புரிமையைக் கொண் டுள்ளார் அல்லது கொள்ளுவதற்கு எதிர்பார்க் கின்றார் எனக் கூறின்.

(2) துணைமைப்பொருள் அல்லது அதன் வரும்படிகள் ஒன்றில் பொருட்பதிவேடாக அல்லது அதன் வரும்படிகளாக இருக்கு மிடத்துத்தவிர, துணைமைப்பொருள் அல்லது அதன் வரும் படிகளிலான கொள்ளுதற் பிணைப் பொறுப்புரிமையொன்று, அக்கொள்ளுதற் பிணைப்பொறுப்புரிமை பின்வருமாறிருப்பின், அதே கடனாளியினாற் கொடுக்கப்பட்ட அதே துணைமைப் பொருளிலான வேறேதேனும் பிணைப்பொறுப்புரிமையிலும் பார்க்கிலும் முன்னுரிமை கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) அருவப் பொருளொன்று தவிர்ந்த துணைமைப் பொருளின் விடயத்தில், கடனாளியென்றமுறையில் துணைமைப்பொருளின் உடைமையைக் கடனாளி பெற்றபின்னர் பத்துநாட்களுக்கு முன்னர் அல்லது பத்துநாட்களினுள் அது நிறைவாக்கப்பட்டிருப்பின், அல்லது கடனாளியின் வேண்டுகோளின்பேரில் மூன்றாந்திறத்தவரொருவர் துணைமைப் பொருளின் உடைமையைப் பெற்றிருப்பின் அல்லது வைத்திருப் பின், இவற்றுள் எது முன்னர் நிகழ்கின்றதோ அப்போது; அல்லது

(ஆ) அருவத் துணைமைப்பொருளொன்றின் விடயத்தில், அந்த அருவத்துணைமைப்பொருளிலான கொள்ளுதற் பிணைப்பொறுப்புரிமை உருவாக்கப்பட்ட பின்னர் பத்துநாட்களுக்கு முன்னர் அல்லது பத்துநாட்களினுள் நிறைவாக்கப்பட்டிருப்பின்.

(3) ஓராம் மற்றும் (2)ஆம் உட்பிரிவுகளினது ஏற்பாடுகளின் பிரயோகம் காரணமாக ஒன்றுக்கு மேற்பட்ட கொள்ளுதற்

பிணைப்பொறுப்புரிமைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப் படின், விற்பனையாளரின் கொள்ளுதற் பிணைப்பொறுப்புரிமை ஏதேனுமிருப்பின் அது, அதே கடனாளியினால் கொடுக்கப்பட்ட வேறேதேனும் கொள்ளுதற் பொறுப்புரிமையைப் பார்க்கிலும் முன்னுரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

பொருட்களுக் காகவும் சேவைகளுக் காகவும் இனங்களின் முன்னுரிமை

**38.** பண்டங்கள் தொடர்பில் பொருட்களை அல்லது சேவைகளைத் தொழிலின் சாதாரண நெறியில் வழங்குகின்றமையின் விளைவாக எழுகின்ற பண்டங்கள் மீதான சோந்தையொன்று, அச்சோந்தை அத்தகைய முன்னுரிமையைக் கொண்டிருத்தலாகாதென ஏற்பாடுசெய்கின்ற ஏதேனும் சட்டத்தின்கீழ் அது எழுந்தாலொழிய, அத்தகைய பண்டங்களிலான நிறைவாக்கப்பட்ட அல்லது நிறைவாக்கப்படாத பிணைப்பொறுப்புரிமையைப் பார்க்கிலும் முன்னுரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

பயிர்களிலான பிணைப்பொறுப் புரிமை

**39.** (1) உற்பத்திப் பருவகாலத்தின்போது பயிர்களை உற்பத்தி செய்வதற்குக் கடனாளியை இயலச்செய்வதற்கென நடுதல் மூலம் அல்லது வேறுவகையாக அத்தகைய பயிர்கள் வளர்கின்ற பயிர்களாக வருவதற்கு முன்னர் ஆறுமாதங்களுக்கு மேற்படாமல் கொடுக்கப்பட்ட பயிர்களிலான அல்லது அவற்றின் வரும்படிகளிலான நிறைவாக்கப்பட்ட ஒரு பிணைப்பொறுப்புரிமை, அதே துணைமைப்பொருளிலான முன்னைய நிறைவாக்கப்பட்ட பிணைப்பொறுப்புரிமையைப் பார்க்கிலும், நடுதல் மூலம் அல்லது வேறுவகையாகப் பயிர்கள் வளர்கின்ற பயிர்களாக வருவதற்கு ஆறுமாதங்களுக்கு முன்னர் போகுமதியாகவிருந்த கடப்பாடுகளுக்கு முன்னைய அக்கறை பிணைப்பொறுப்பளிக்கும் அளவுக்கு, பெறுமதி கொடுக்கும் ஆள் முன்னைய பிணைப்பொறுப்புரிமை பற்றி அறிவித்தல் பெற்றிருந்தாலுங்கூட, முன்னுரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் பிரயோகம் காரணமாக ஒன்றுக்கு மேற்பட்ட நிறைவாக்கப்பட்ட பிணைப்பொறுப்புரிமைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமிடத்து, ஒவ்வொன்றும் தொடர்பில் முற்பணமாகக் கொடுக்கப்பட்ட தொகை, முற்பணமாகக் கொடுக்கப்பட்ட மொத்தத் தொகைக்கு என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அந்த விகிதாசாரத்துக்கிணங்க ஒவ்வொன்றும் சமமான நிலையிலிருத்தல் வேண்டும்.

பொருத்திகளிலான பிணைப்பொறுப் புரிமை

**40.** (1) (அ) பண்டங்கள் ஒரு பொருத்தியாக வருமுன்னர் பற்றிநின்ற பண்டங்களிலான பிணைப்பொறுப் புரிமையொன்று,அசைவற்ற ஆதனத்தில் அக்கறை யொன்றைக் கொண்டுள்ள எவரேனும் ஆளின் உரிமைக்கோரிக்கையின் மேலாக அத்தகைய பொருத்தி தொடர்பில் முன்னுரிமை கொண்டி ருத்தல் வேண்டும்; அல்லது

(ஆ) பண்டங்கள் ஒரு பொருத்தியாக வந்த பின்னர் பற்றிநின்ற பண்டங்களிலான பிணைப்பொறுப் புரிமையொன்று, அசைவற்ற ஆதனத்தில் அக்கறை யொன்றை அடுத்துப் பின்னர் கொள்ளுதல்செய்த எவரேனும் ஆளின் உரிமைக்கோரிக்கையைப் பார்க்கிலும் ஆனால் பண்டங்களிலான பிணைப் பொறுப்புரிமை பற்றி நின்ற நேரத்தில் அசைவற்ற ஆதனத்தில் பதிவுசெய்யப்பட்ட அக்கறை யொன்றைக் கொண்டிருந்தவரும், பிணைப்பொறுப் புரிமைக்கு எழுத்தில் சம்மதிக்காதவரும் அல்லது பொருத்தியிலான அக்கறையொன்றுக்கு உரிமை துறக்காதவருமான எவரேனும் ஆளின் மேலாக வல்லாது பொருத்தி தொடர்பில் முன்னுரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட பிணைப் பொறுப்புரிமையொன்று, அடுத்துப்பின்னரான கொள்வனவு அல்லது முன்னைய வில்லங்கம் பற்றிய பதிவின் கீழ் அடுத்துப்பின்னரான முற்பணம், பிணைப்பொறுப்புரிமை பற்றி அறியாமல் கொடுக்கப்படின் அல்லது செய்துகொள்ளப்படின் மற்றும் (117 ஆம் அத்தியாயமான) ஆவணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் III க்கிணங்க அதுபற்றிய முன்னறிவித்தல் பதிவு செய்யப்படின்,-

(அ) அசைவற்ற ஆதனத்திலான அக்கறையொன்றின் பெறுமதிக்காக அடுத்துப் பின்னரான கொள்வன வாளரின்; அல்லது

(ஆ) கடன்கொடுநர் அடுத்துப்பின்னரான முற்பணங்களைக் கொடுக்கும் அளவுக்கு, அசைவற்ற ஆதனத்தின்மீது முன்னைய வில்லங்கம் பற்றிய பதிவுடனான கடன் கொடுநரின்,

அக்கறைக்குக் கீழமைந்ததாதல் வேண்டும்.

(3) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரொருவர், அசைவற்ற ஆதனத்தில் அக்கறை கொண்டுள்ள ஆளொருவரின் உரிமைக் கோரிக்கையைப் பார்க்கிலும் முன்னுரிமைகொண்டுள்ள பொருத்தியொன்றில் அக்கறை கொண்டுள்ளவிடத்து, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர், தவறுகையின்மீதும் தவறுகை தொடர்பாக இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமையவும், வேறு வகையாக உடன்பட்டுக்கொள்ளப்பட்டாலொழிய, பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர், வில்லங்கமொன்றைக் கொண்டுள்ள எவரேனுமாளுக்கு அல்லது கடனாளியாகவிராத அசைவற்ற ஆதனத்தின் சொந்தக்காரருக்கு, பொருத்தியில்லாமை யினால் அல்லது மாற்றீடு செய்வதற்கான அவசியத்தினால் விளைவிக்கப்பட்ட, அசைவற்ற ஆதனத்தின் பெறுமதியிலான குறைவு நீங்கலாக, ஏதேனும் உருப்படியான ஊறுபாட்டைத் திருத்துவதற்கான ஆகுசெலவை மீளளித்தால் அசைவற்ற ஆதனத்திலிருந்து பொருத்தியை அகற்றலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் மீளளிப்புக்கு உரித்துள்ள ஆளொருவர், பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர் மீளளிப்புக்காகப் போதிய பிணைப்பொறுப்பைக் கொடுக்கும்வரை, பொருத்தியின் அகற்றுகைக்கு அனுமதி மறுக்கலாம்.

(5) அசைவற்ற ஆதனத்திலிருந்து பொருத்தியொன்றை அகற்றுவதற்கு உரிமைகொண்டுள்ள பிணைபொறுப் பளிக்கப்பட்ட திறத்தவர், அத்தகைய அசைவற்ற ஆதனத்தில் அக்கறை யொன்றைக் கொண்டுள்ளாரென இயைபான காணிப்பதிவக அலுவலகத்தினால் பேணப்பட்ட பதிவேடுகளில் எந்த ஆளின் பெயர் காணப்படுகின்றதோ அந்த ஆள் ஒவ்வொருவருக்கும்,

பொருத்தியை அகற்றுவதற்கான பிணைப்பெறுப்பளிக்கப்பட்ட திறத்தவரின் உட்கருத்துப்பற்றி எழுத்திலான அறிவித்தலொன்றைச் சேர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அறிவித்தல் பின்வரும் தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரின் பெயரும் முகவரியும்;

(ஆ) அகற்றப்படவுள்ள பொருத்தியை அடையாளங் காண்பதனை இயலச்செய்வதற்குப் போதியதான அதன் விவரணம்;

(இ) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரின் பிணைப்பொறுப்புரிமையினால் பிணைப்பொறுப் பளிக்கப்பட்ட கடப்பாட்டைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்ட தொகை;

(ஈ) பொருத்தியானது பொருத்தப்பட்ட அசைவற்ற ஆதனத்தை அடையாளங்காண்பதனை இயலச் செய்வதற்குப் போதியதான, அசைவற்ற ஆதனத்தின் விவரணம்; அத்துடன்

(உ) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட தொகை, அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்பட்டாலொழிய, பொருத்தியை அகற்றுவதற்கான முன்னம் பற்றிய கூற்று; அத்தேதி, அறிவித்தல் சேர்ப் பிக்கப்பட்ட பின்னர் பத்து நாட்களுக்குக் குறைவானதாகவிருத்தலாகாது.

(6) ஐந்தாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தல், தோதான பதிவகத்தின் பதிவேடுகளில் காணப்படுகின்றவாறாக அறிவிக்கப்படவேண்டிய ஆளின் முகவரிக்கு அல்லது ஒரு கம்பெனியின் விடயத்தில், அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்துக்கு அல்லது அதன் சார்பில் ஏதேனும் அறிவித்தலை ஏற்றுக்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஓர் அற்றோணியின் முகவரிக்குப் பதிவஞ்சலில் அதனை அனுப்புதல் மூலம் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(7) பொருத்தியொன்றில் பிணைப்பொறுப்புரிமைக்கு அமைந்ததாகவுள்ள ஏதேனும் அசைவற்ற ஆதனத்தில் அக்கறையொன்றைக் கொண்டுள்ள ஆளொருவர், (3)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய பொருத்தி பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரினால் அத்தகைய ஆதனத் திலிருந்து அகற்றப்படுமுன்னர், அத்தகைய ஆளின் அக்கறையிலும் பார்க்க முன்னுரிமை கொண்டுள்ள பிணைப்பொறுப்புரிமை தொடர்பில் போகுமதியான தொகையைப் பிணைப்பொறுப் பளிக்கப்பட்ட திறத்தவருக்குக் கொடுப்பனவு செய்வதன்மேல் அப்பொருத்தியைத் தொடர்ந்து வைத்திருக்கலாம்.

சொத்து வளர்ச்சியிலான பிணைப்பொறுப் புரிமை

**41.** (1) உட்பிரிவுகள் (2) மற்றும் (3) அத்துடன் 42ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய,-

(அ) பண்டங்கள் சொத்துவளர்ச்சியாக வருமுன்னர் பற்றிநின்ற அத்தகைய பண்டங்களிலான பிணைப் பொறுப்புரிமை, முழுமை தொடர்பிலும் எவரேனு மாளின் உரிமைக்கோரிக்கையின் மேலாக சொத்து வளர்ச்சி தொடர்பில் முன்னுரிமை கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) பண்டங்கள் சொத்து வளர்ச்சியாக வந்த பின்னர் பற்றிநின்ற பண்டங்களிலான பிணைப் பொறுப்புரிமை, முழுமையிலும் அக்கறையொன்றை அடுத்துப்பின்னர் கொள்ளுதல் செய்த எவரேனு மாளின் உரிமைக்கோரிக்கையைப் பார்க்கிலும், முன்னுரிமை கொண்டிருத்தல் வேண்டும். ஆனால் பிணைப்பொறுப்புரிமை சொத்து வளர்ச்சியைப் பற்றிநின்ற இணைந்திருந்த தேதியன்று பண்டங்களின் முழுமையிலும் அக்கறையொன்றைக் கொண்டிருத்தவரும், முழுமையின் ஒரு பாகமாக, சொத்துவளர்ச்சியிலான பிணைப்பொறுப்புரிமைக்கு எழுத்தில் சம்மதிக்காதவரும் அல்லது சொத்து வளர்ச்சியில் அக்கறையொன்றை உரிமை

துறக்காதவருமான எவரேனுமாளின் உரிமைக் கோரிக்கைக்கு மேலாக முன்னுரிமை கொண்டிருத்தலாகாது.

*(2)* ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பிணைப் பொறுப்புரிமையொன்று:-

*(அ)* முன்னர் நிறைவாக்கப்பட்ட பிணைப்பொறுப்புரிமையின் கீழான அடுத்துப் பின்னரான விற்பனை அல்லது அடுத்துப்பின்னரான முற்பணம் பிணைப் பொறுப்புரிமை நிறைவாக்கப்படு முன்னர் செய்யப்படின் அல்லது செய்துகொள்ளப்படின்,

(i) முழுமையிலுமான அக்கறையின் அடுத்துப் பின்னரான வாங்குநரின் அக்கறைக்குக் கீழமைந்ததாதல் வேண்டும்; அத்துடன்

(ii) முழுப்பண்டங்களிலுமான முன்னர் நிறைவாக்கப்பட்ட பிணைப்பொறுப்புரிமையுடனான கடன்கொடுநர் அடுத்துப் பின்னராக முற்பணங்களை அளிக்கும் அளவுக்கு, அக்கடன்கொடுநரின் அக்கறைக்குக் கீழமைந்ததாதல் வேண்டும்; அத்துடன்

*(ஆ)* பிணைப்பொறுப்புரிமை நிறைவாக்கப்படு முன்னர், தீர்ப்பு அறிவித்தலொன்றை அல்லது உரிமைக் கோரிக்கை அறிவித்தலொன்றைப் பதிவு செய்கின்ற கடன்கொடுநரொருவரின் அக்கறைக்குக் கீழமைந்ததாகும்.

*(3)* இரண்டாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், சொத்துவளர்ச்சியின் உடைமையைக் கடனாளி பெற்றபின்னர் பத்து நாட்களுக்கு முன்னர் அல்லது பத்து நாட்களினுள் நிறைவாக்கப்பட்ட சொத்துவளர்ச்சியிலான கொள்ளுதற் பிணைப்பொறுப்புரிமையொன்று, அப்பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட கடன்கொடுநரின் அக்கறைக்குமேலாக முன்னுரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

(4) முழுமையிலும் அக்கறையொன்றைக் கொண்டுள்ள எவரேனுமாளின் உரிமைக்கோரிக்கையிலும் பார்க்க முன்னுரிமை கொண்டுள்ள சொத்துவளர்ச்சியில் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரொருவர் அக்கறை கொண்டுள்ளாராயின், பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர் தவறுகையின்மீதும் தவறுகை தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமையவும், வேறுவகையாக உடன்பட்டுக்கொள்ளப்பட்டாலொழிய, சொத்துவளர்ச்சி இல்லாமை யினால் அல்லது அதனை மாற்றீடு செய்வதற்கான அவசியத்தினால் விளைவிக்கப்பட்ட, முழுமையினது பெறுமதியின் குறைவு நீங்கலாக, ஏதேனும் உருப்படியான ஊறுபாட்டைத் திருத்துவதற்கான ஆகுசெலவை வில்லங்கமொன்றைக் கொண்டுள்ள எவரேனு மாளுக்கு அல்லது கடனாளியாகவிராத பண்டங்களின் முழுமை யினதும் சொந்தக்காரருக்கு பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர் மீளளிப்பதாக, முழுமையிலிருந்து சொத்து வளர்ச்சியை அகற்றலாம்.

(5) நான்காம் உட்பிரிவின் கீழான ஏதேனும் மீளளிப்புக்கு உரித்துடைய ஆளொருவர், மீளளிப்புக்குப் போதிய பிணைப் பொறுப்பைப் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர் கொடுக்கும்வரை சொத்துவளர்ச்சியை அகற்றுவதற்கான அனுமதியை மறுக்கலாம்.

(6) முழுமையிலிருந்தும் சொத்துவளர்ச்சியை அகற்றுவதற்கு உரிமையுள்ள பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர், மீதிப்பண்டங்களில் அக்கறைகொண்டுள்ளவரெனப் பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர் அறிந்த ஒவ்வோராளுக்கும் மற்றும் அத்தகைய மீதியிலான பிணைப்பொறுப்புரிமையைக்கொண்ட எவரேனுமாளுக்கும், பண்டங்களின் அத்தகைய மீதியின் அடையாளங்காணல் தொடரிலக்கம் பதிவுக்காகத் தேவைப்படின், அத்தகைய இலக்கத்தினூடாகக் கடனாளியின் பெயருக்கெதிராகப் பதிவுமூலம் நிறைவாக்கப்பட்டதும் பின்வருவனவற்றைக் கொண்டதும், சொத்துவளர்ச்சியை அகற்றுவதற்குப் பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரின் முன்னம் பற்றியதுமான எழுத்திலான அறிவித்தலொன்றைச் சேர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரின் பெயரும் முகவரியும்;

(ஆ) சொத்துவளர்ச்சியை அடையாளங்காண்பதனை இயலச்செய்வதற்குப் போதியதாகவுள்ளதும், அகற்றப்படவேண்டியதுமான சொத்து வளர்ச்சியின் விவரணம்;

(இ) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரின் பிணைப்பொறுப்புரிமையினால் பிணைப் பொறுப் பளிக்கப்பட்ட கடப்பாட்டைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்பட்ட தொகை;

(ஈ) ஏனைய பண்டங்களை அடையாளங்காண்பதனை இயலச் செய்வதற்குப் போதியதான அவற்றின் விவரணம்; அத்துடன்

(உ) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட தொகை அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவொரு தேதியன்று அல்லது தேதிக்கு முன்னர் செலுத்தப்பட்டாலொழிய, முழுமையிலிருந்து சொத்து வளர்ச்சியை அகற்று வதற்கான முன்னம்பற்றிய ஒரு கூற்று; இது, அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்ட பின்னர் பத்து நாட்க ளுக்குக் குறைவாகவிருத்தலாகாது.

(7) ஆறாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தல், சொத்துவளர்ச்சி அகற்றப்படுவதற்குக் குறைந்தபட்சம் பத்து நாட்களுக்கு முன்னரேனும் பதிவஞ்சல் மூலம் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(8) சொத்துவளர்ச்சியில் பிணைப்பொறுப்புரிமைக்கு அமைந்ததாகவுள்ள முழுமையிலும் அக்கறைகொண்டுள்ள ஆளொருவர், சொத்து வளர்ச்சியானது (4)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்த வரினால் அகற்றப்படுமுன்னர், அத்தகைய ஆளின் அக்கறையைப் பார்க்கிலும் முன்னுரிமை கொண்ட, பிணைப்பொறுப்புரிமை தொடர்பில் போதுமதியான தொகையை பிணைப்பொறுப்பளிக் கப்பட்ட திறத்தவருக்குக் கொடுப்பனவு செய்வதன்மீது சொத்து வளர்ச்சியை தொடர்ந்து வைத்திருக்கலாம்.

*செய்முறைப் படுத்தப்பட்ட அல்லது ஒன்றாகக் கலக்கப்பட்ட சொத்துக் களிலான பிணைப் பொறுப்புரிமை*

**42.** (1) ஓர் உற்பத்திப்பொருளின் பாகமாக அல்லது ஓர் உற்பத்திப் பொருளின் திரண்மமாக அடுத்துப்பின்னர் வருகின்ற நிறைவாக்கப்பட்ட பண்டங்களிலான பிணைப் பொறுப்புரிமை, பின்வருமாறாயின் அத்தகைய உற்பத்திப் பொருளில் அல்லது திரண்மத்தில் தொடர்ந்திருத்தல் வேண்டும்:-

(அ) உற்பத்திப்பொருளில் அல்லது உற்பத்திப் பொருளின் திரண்மத்தில் பண்டங்களின் அடையாளங்காண முடியாது போகும்வகையில் அவை அவ்வாறு உற்பத்திசெய்யப்படின், செய்முறைப்படுத்தப்படின், ஒன்றிணைக்கப்படின் அல்லது ஒன்றாகக்கலக்கப் படின்; அத்துடன்

(ஆ) உற்பத்திப்பொருளுடன் அல்லது உற்பத்திப் பொருளின் திரண்மத்துடன் ஒன்றுக்கு மேற்பட்ட பிணைப்பொறுப் புரிமைகள் பற்றிநிற்பின்,

மற்றும் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர்கள், ஒவ்வோர் அக்கறையும் தொடக்கத்தில் பற்றிநின்ற பண்டங்களின் ஆகுசெலவானது, மொத்த உற்பத்திப் பொருளின் அல்லது திரண்மத்தின் ஆகுசெலவுக்கு என்ன விகிதத்தைக் கொண் டுள்ளதோ அந்த விகிதத்துக்குக்கிணங்கச் சமமான நிலையி லிருத்தல் வேண்டும்.

(2) நிதிகள் என்ற வடிவத்திலான வரும்படிகள் மேற்கொண்டு அடையாளங்காணத்தக்கனவாகவிராத வகையில், ஏனைய நிதிகளுடன் ஒன்றாய்க்கலக்கப்பட்டனவாக வரும் போது:-

(அ) எவ்வாறாயினும் அவை அடையாளங்காணத் தக்கனவான வரும்படிகளாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஒன்றாய்க் கலக்குகை இடம்பெற்ற பின்னர் எந்நேரத்திலும் நிதிகளின் மொத்தத்தொகை, ஒன்றாய்க் கலக்குகைக்கு முன்னரான வரும் படிகளின் தொகைக்கு குறைவாகக் காணப்படின், அப்போது, மல்லுக்கட்டுகின்ற உரிமைக் கோரிக்கையாளர்கள் ஒன்றாய்க் கலக்கப்பட்ட நிதிகளைத் தகவுக்கேற்ற அடிப்படையில் பகிர்தல் வேண்டும்.

*அசைவற்ற ஆதனத்தின் குத்தகையின் கீழ் கொடுப் பனவுக்கான உரிமை*

**43.** இச்சட்டம் ஏற்புடையதாகவுள்ள அசைவற்ற ஆதனத்தின் குத்தகையின்கீழ் கொடுப்பனவுக்கான உரிமையொன்றிலான பிணைப்பொறுப்புரிமை, குத்தகையில் அல்லது குத்தகையின் விடயப்பொருளாகவுள்ள அசைவற்ற ஆதனத்தில் குத்தகை கொடுநரின் அக்கறையைப் பெறுமதிக்காகக் கொள்ளுகின்ற ஆளொருவரின் அக்கறை அல்லது ஆளின் அதுபற்றிய அறிவித்தல், பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரின் அக்கறை அல்லது அதுபற்றிய அறிவித்தல் இயைபான காணிப் பதிவக அலுவலகத்தில் பதிவுசெய்யப்படுவதற்கு முன்னர் அத்தகைய இயைபான காணிப் பதிவக அலுவலகத்தில் பதிவுசெய்யப்படின், அவ்வாளின் அக்கறைக்குக் கீழமைந்ததாகவிருத்தல் வேண்டும்.

*அசைவற்ற ஆதனத்தின் ஈட்டின்கீழ் கொடுப் பனவுக்கான உரிமை*

**44.** இச்சட்டம் ஏற்புடையதாகவுள்ள அசைவற்ற ஆதனத்தின் ஈட்டின்கீழ் அல்லது தாக்கீட்டின்கீழ் ஒரு கொடுப்பனவிலான பிணைப்பொறுப்புரிமை, ஈட்டில் அல்லது தாக்கீட்டில் ஈடுபெறுநரின் அல்லது தாக்கீட்டாளரின் அக்கறையை பெறுமதிக்காகக் கொள்கின்ற ஆளொருவரின் அக்கறையானது பிணைப் பொறுப்புரிமை பற்றிய ஓர் அறிவித்தல் இயைபான காணிப் பதிவக அலுவலகத்தில் பதிவு செய்யப்படுவதற்கு முன்னர் அத்தகைய இயைபான காணிப் பதிவக அலுவலகத்தில் பதிவுசெய்யப்படின், அவ்வாளின் அக்கறைக்குக் கீழமைந்ததாகவிருத்தல் வேண்டும்.

*தன்னிச்சையான கீழமைவு*

**45.** (1) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறந்தவரொருவர், மல்லுக்கட்டுகின்ற உரிமைக் கோரிக்கையாளர்களிடையே செய்துகொள்ளப்பட்ட பிணைப்பொறுப்பு உடன்படிக்கையின் மூலம் அல்லது ஒரு தனிவேறான உடன்படிக்கையின்மூலம், வேறேதேனும் அக்கறைக்குப் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரின் பிணைப்பெறுப்புரிமையைக் கீழமைந்ததாக்கலாம் என்பதுடன், அத்தகைய கீழமைவு அதன் நியதிகளின்படி பயனுடையதாதலும் வேண்டும்.

(2) திறத்தவர்களிடையேயான கீழமைவின் நியதிகளின்படி அது பயனுடையதாதல் வேண்டும் என்பதுடன், எந்த ஆளின் அல்லது

ஆட்கள் வகுப்பினருள் ஒருவரின் நன்மைக்காகக் கீழமைவு முன்னப்பட்டதோ அந்த ஆளாக அல்லது ஆட்கள் வகுப்பினருள் ஒருவராக மூன்றாந்திறத்தவர் இருப்பின், அம்மூன்றாந்திறத்த வரினால் வலுவுக்கிடவும்படலாம்.

துணைமைப் பொருளில் கடனாளி யொருவரின் உரிமைகளைப் பராதீனப் படுத்துதல்

**46**. துணைமைப்பொருளில் கடனாளியொருவரின் உரிமை கள், கைமாற்றுகையொன்றைத் தடைசெய்து அல்லது கைமாற்றுகை யொன்றைத் தவறுகையென வெளிப்படுத்தி பிணைப்பொறுப்பு உடன்படிக்கையிலுள்ள ஏதேனும் ஏற்பாடு எவ்வாறிருப்பினும், தன்னிச்சையாக அல்லது தன்னிச்சையாகவல்லாமல் கைமாற்றப் படலாம், ஆனால் அத்தகைய கைமாற்றமெதுவும், பிணைப்பொறுப்பு உடன்படிக்கையின்கீழ் அல்லது வேறுவகையாகப் பிணைப் பொறுப் பளிக்கப்பட்ட திறத்தவரின் உரிமைகளைப் பங்கப்படுத்துதலாகாது.

அருவப் பொருட்கள் முதலியவற்றின் சாட்டுகையும் மூன்றாந் திறத்தவர் கணக்குக் கடனாளிகளின் உரிமைகளும்

**47**. (1) கணக்குக் கடனாளிக்கும் சாட்டுநருக்கும் இடையேயான ஓர் ஒப்பந்தத்திலிருந்து எழுகின்ற எதிர்வாதங்களை அல்லது எவையேனும் உரிமைக்கோரிக்கைகளை நிலைநாட்டாதிருப்பதற்கு அத்தகைய கணக்குக் கடனாளி வலுவுக்கிடப்படற்பாலதான ஓர் உடன்படிக்கையைச் செய்திருந்தாலொழிய, கணக்குக் கடனாளி யொருவர், சாட்டுணிக்கெதிரான எதிர்வாதம் என்ற வகையாகப் பின்வருவனவற்றை நிலைநாட்டலாம்:-

(அ) ஒப்புரவான எதிரீடு மற்றும் பிறழ்பகர்வு உட்பட, ஒப்பந்தத்தின் நியதிகளிலிருந்து அல்லது தொடர்புபட்ட ஒப்பந்தத்திலிருந்து எழுகின்ற சாட்டுநருக்கெதிராகக் கணக்குக் கடனாளிக்குக் கிடைக்கக்கூடியனவாகவுள்ள எல்லா எதிர் வாதங்களும்; அத்துடன்

(ஆ) சாட்டுகை பற்றிய அறிவித்தலைக் கடனாளி பெறு முன்னர் கணக்குக் கடனாளிக்குச் செலுத்தப் படற்பாலதாகவிருந்ததும் சாட்டுநரிடமிருந்து கணக்குக் கடனாளிக்குப் போகுமதியானதுமான ஏதேனும் தனிசை எதிரீடு செய்வதற்கான உரிமை.

(2) ஒரு கணக்கு அல்லது தட்டுமுட்டுப்பொருட் பத்திரத்தின்மீது கடப்பாடுடைய ஆளொருவர், அக்கணக்கு அல்லது தட்டுமுட்டுப் பொருட் பத்திரம் சாட்டுதல் செய்யப்பட்டுள்ளதென இயைபான உரிமைகளை நியாயமான முறையில் அடையாளங்காட்டி அவ்வாள் அறிவித்தல் பெறும்வரை, சாட்டுநருக்குப் பணஞ்செலுத்த லாமென்பதுடன், கணக்குக் கடனாளியினால் வேண்டுகோள் விடுக்கப்படின், சாட்டுணி, சாட்டுகை செய்யப்பட்டுள்ளதென நியாயமான காலத்தினுள் எண்பிப்புக் கொடுத்துதவுதலும் வேண்டும்.அத்துடன் சாட்டுணி அவ்வாறு செய்யாவிடின், அவ்வாள் சாட்டுநருக்குப் பணஞ்செலுத்தலாம்.

(3) சாட்டுதல் செய்யப்பட்டுள்ள ஓர் ஒப்பந்தத்தின்கீழ் கொடுப்பனவுக்கான அல்லது பகுதியளவிலான கொடுப் பனவுக்கான உரிமையானது, புரிகையின்மூலம் ஈட்டிப் பெறப்பட்டிராத அளவுக்கும் சாட்டுகைபற்றிய அறிவித்தலைப் பொருட்படுத்தாமலும், நல்லெண்ணத்துடனும் நியாயமான வர்த்தக நியமங்களுக்கிணங்கவும், ஒப்பந்தத்தின்கீழ் சாட்டுணியின் உரிமைகளின்மீது அல்லது ஒப்பந்தத்தைப் புரிவதற்குச் சாட்டுநரின் ஆற்றலின்மீது அவசியமான பாதகமான தாக்கமின்றியும், ஒப்பந்தத்திற்கான ஏதேனும் திரிபு அல்லது பதிலீடு, அக் கணக்கின்மீது அல்லது தட்டுமுட்டுப்பொருட் பத்திரத்தின்மீது கடப்பாடுடைய ஆள் வேறுவகையாக உடன்பட்டிருந்தாலொழிய, சாட்டுணிக்கெதிராகப் பயனுடையதாதல் வேண்டும். எவ்வாறா யினும், சாட்டுணி, திரிபுபடுத்தப்பட்ட அல்லது பதிலீடுசெய்யப்பட்ட ஒப்பந்தத்தின்கீழ் ஒத்த உரிமைகளைக் கொள்ளுதல் வேண்டும்.

(4) வருமதியான அல்லது வருமதியாக வரவுள்ள பணத்துக்காக கணக்கின் அல்லது தட்டுமுட்டுப்பொருட்பத்திரத்தின் முழுமையிலும் பிணைப்பொறுப்புரிமையைச் சாட்டுதல் செய்கின்றமையை அல்லது கொடுக்கின்றமையை தடைசெய்கின்ற அல்லது மட்டுப்படுத்துகின்ற அல்லது பிணைப்பொறுப்புரிமையை அவ்வாறு கொடுக்கின்றமைக்கு கணக்குக் கடனாளியின் சம்மதத்தைத் தேவைப்படுத்துகின்ற கணக்குக் கடனாளிக்கும் சாட்டுநருக்கும் இடையேயான ஒப்பந்தத்திலுள்ள நியதியொன்று

(அ) அவர்களின் ஒப்பந்தத்தை மீறியமைக்காகச் சாட்டுநரைக் கணக்குக் கடனாளிக்குப் பொறுப்பாக்குவதற்கான அளவுக்கு மட்டுமே, சாட்டுநரைப் பிணிப்பதாதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) மூன்றாந்திறத்தவர்களுக்கெதிராக வலுக்கிடப் படற்பாலதாதலாகாது.

(5) இப்பிரிவின் நோக்கத்துக்காக, "கணக்குக் கடனாளி" என்பது, ஒரு கணக்கின்மீது அல்லது தட்டுமுட்டுப்பொருட் பத்திரத்தின்மீது கடப்பாடுடையவரான ஆளொருவர் என்று பொருளாகும்.

## பாகம் VI

## பதிவுசெய்தல்

**48.** (1) அசைவுள்ள ஆதனத்தின் பிணைப்பொறுப்புரிமைகளைப் பதிவுசெய்தல் தொடர்பிலான தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் அதிகாரசபையினால் பிரயோகிக்கப்படுதலும், புரியப்படுதலும், நிறைவேற்றப்படுதலும், வேண்டும்.

பிணைப்பொறுப்புரிமைகளைப் பதிவுசெய்தலும் இடாப்பை நிலைப்படுத்தலும்

(2) பணியகமானது, இச்சட்டத்தின் நோக்கத்துக்காக, (இதனகத்துப்பின்னர் "இடாப்பு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அசைவுள்ள ஆதனத்திலான பிணைப்பொறுப்புரிமைகள் இடாப்பு எனவழைக்கப்பட்டு அறியப்படவேண்டிய இடாப்பொன்றை நிலைப்படுத்துதலும், பேணுதலும், செயற்படுத்துதலும் வேண்டும்.

(3) கீழே குறித்துரைக்கப்பட்ட கட்டளைகற்களுள் ஏதேனுமொன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றைப் பயன்படுத்தி, இலகுவாகவும் உடனடியாகவும் தேடுகையொன்றை வசதிப்படுத்தும் வகையிலான அத்தகைய முறையில் இடாப்பானது பேணப்படுதல் வேண்டும்:-

(அ) கடனாளியின் தனித்துவமான அடையாளங்காணல் இலக்கத்தின்மூலம்;

(ஆ) நிதியளிப்புக் கூற்று இலக்கத்தின்மூலம்; அல்லது

(இ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான வேறெவையேனும் மேலதிகக் கட்டளைக்கற்கள் மூலம்.

*பிணைப் பொறுப் புரிமைகளைப் பதிவு செய்வதற் கான விண் ணப்பம்*

**49.** (1) இச்சட்டத்தின்கீழ் பதிவுமூலம் பிணைப்பொறுப்புரிமையொன்றை நிறைவாக்குவதற்கென, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் தயாரிக்கப்பட்ட நிதியளிப்புக் கூற்றொன்றை பதிவாளரிடம் பதிவுசெய்யும்படி தேவைப்படுத்துதல் வேண்டும்.

(2) ஒரு நிதியளிப்புக் கூற்றைக் கோப்பிடுகின்ற ஆளொருவர், அது எந்தப் பிணைப்பொறுப்பு உடன்படிக்கையுடன் தொடர்பு படுகின்றதோ அந்தப் பிணைப்பொறுப்பு உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது அல்லது கடனாளி அத்தகைய கூற்று கோப்பிடப்படுவதற்குச் சம்மதிக்கின்றார் என உறுதிப்படுத்தும்படி தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) (அ) எந்நிதியளிப்புக் கூற்றொன்று விதித்துரைக்கப் பட்ட படிவத்துக்கிணங்கியிராதும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளினால் அல்லது அதற்கென ஆக்கப்பட்ட எவையேனும் இயைபான ஒழுங்குவிதிகளினால் விதிக்கப்பட்டதும் ஆன தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகவிராதும் உள்ளதோ;

(ஆ) எந்த நிதியளிப்புக் கூற்று தொடர்பில் விதித்துரைக்கப்பட்ட கட்டணம் செலுத்தப்பட்டிருக்கவில்லையோ அல்லது கோப்பிடுதற் கட்டணத்தைச் செலுத்துவதற்கான ஒழுங்கேற்பாடொன்று செய்யப்படவில்லையோ; அல்லது

(இ) இலத்திரனியல் ரீதியில் பதிவுசெய்யும் போது எந்த நிதியளிப்புக் கூற்றில் நிரப்பப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட பணிப்பாணை ரீதியிலான கூடுகள் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லையோ,

அந்நிதியளிப்புக்கூற்று பதிவாளரினால் நிராகரிக்கப்படலாம்.

**50.** (1) நிதியளிப்புக் கூற்றொன்று:- நிதியளிப்புக் கூற்று

(அ) அது எந்தப் பிணைப்பொறுப்பு உடன்படிக்கை தொடர்பானதோ அந்தப் பிணைப்பொறுப்பு உடன்படிக்கை செய்யப்படுவதற்கு முன்னர் அல்லது செய்யப்பட்ட பின்னர், துணைமைப் பொருளானது பாவனையாளர் பண்டங்களைக் கொண்டுள்ளவிடத்துத் தவிர, கோப்பிடப்படலாம்;

(ஆ) துணைமைப்பொருளானது பாவனையாளர் பண்டங்களைக் கொண்டுள்ளவிடத்துத் தவிர, திறத்தவர்களிடையேயான ஒன்றுக்கு மேற்பட்ட பிணைப்பொறுப்பு உடன்படிக்கைகளில் உருவாக்கப்பட்ட அல்லது ஏற்பாடு செய்யப்பட்ட ஒன்றுக்கு மேற்பட்ட பிணைப்பொறுப்புரிமைகள் தொடர்பானதாகவிருக்கலாம்; அத்துடன்

(இ) பின்வரும் தகவல்களை உள்ளடக்குதல் வேண்டும்:-

(i) கடனாளியின் பெயர்;

(ii) கடனாளியின் தனித்துவமான அடையாளங் காண் இலக்கம்;

(iii) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரின் அல்லது அதன் முகவரின் பெயரும் முகவரியும்;

(iv) விதித்துரைக்கப்பட்ட முறையில் துணைமைப் பொருளின் விவரணம்;

(v) கோப்பிடுதலின் கால எல்லை;

(vi) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட அதிகபட்சக் கடப்பாட்டுத் தொகை; அத்துடன்

(vii) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தகவல்கள்.

(2) நிதியளிப்புக் கூற்றொன்று, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர் ஒரு நம்பிக்கைபொறுப்பாளராவென்பதையும் வெளிக்காட்டுதல் வேண்டும்.

ஒரு பதிவு பயனுறுவதாக வரும்போது

**51.** (1) கோப்பிடப்படுகின்ற நிதியளிப்புக் கூற்று, ஒரு தேதியும், நேரமும், ("நிதியளிப்புக் கூற்று இலக்கம்" எனவறியப்படவேண்டிய) இலக்கமும் பதிவாளரினால் அதற்குக் குறித்தளிக்கப்படும்போது பதிவுசெய்யப்பட்ட நிதியளிப்புக் கூற்றாக வருகின்றது.

(2) நிதியளிப்புக் கூற்று பதிவுசெய்யப்பட்டவுடன்-

(அ) அது பொறுப்புவிடுவிக்கப்படும்வரை; அல்லது

(ஆ) சம்பந்தப்பட்ட நிதியளிப்புக் கூற்று, அதன் பதிவு எத்தேதியன்று பயனுடையதாக இல்லாதொழி கின்றதோ அத்தேதியைக் குறித்துரைத்தால், மற்றும் பதிவானது அதுவரை பொறுப்புவிடுவிக்கப்பட்டி ராதுவிடின், அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட தேதி வரை,

பயனுறுவதாகத் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

சரிபார்த்தற் கூற்று

**52.** (1) நிதியளிப்புக் கூற்றொன்று பதிவுசெய்யப்பட்டதன்மேல், பதிவாளர், விதித்துரைக்கப்பட்டவொரு தொடர்பாடல்முறையைப் பயன்படுத்தி, விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான சரிபார்த்தற் கூற்றொன்றை, நிதியளிப்புக் கூற்றில் பெயர் குறிப்பிடப்பட்ட பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரிடம் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட முகவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட சரிபார்த்தற் கூற்றொன்று பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) நிதியளிப்புக் கூற்றில் அடங்கியுள்ள தகவல்கள்;

(ஆ) நிதியளிப்புக் கூற்றின் இலக்கம்; அத்துடன்

(இ) அது பதிவுசெய்யப்பட்ட தேதியும் நேரமும்.

*நிதியளிப்புக் கூற்றிலான பிழைகள்*

**53.** (1) நிதியளிப்புக் கூற்றொன்றின் பதிவானது, அக்கூற்றைக் கண்டுபிடிப்பதனைத் தடுக்கின்ற பிழையான தனித்துவமான அடையாளங்காண் இலக்கத்தை அத்தகைய கூற்று கொண்டிருப்பின், செல்லுபடியற்றதாதல் வேண்டும். எவ்வாறாயினும், ஒரு நிதியளிப்புக் கூற்றின் செல்லுபடியாந்தன்மை, அதன் கண் காணப்பட்ட ஏதேனும் குறைபாட்டினால் நியாயமான ஆளொருவர் அவசியமாக பிழைவழியுய்க்கப்படும் சாத்தியமிருந்தாலொழிய, அத்தகைய குறைபாடு காரணமாக வேறுவகையாகப் பாதிக்கப் படலாகாது.

(2) ஒரு நிதியளிப்புக் கூற்றில் ஏதேனும் துணைமைப்பொருளின் விவரணத்தை வழங்கத் தவறுதல், அத்தகைய நிதியளிப்புக் கூற்றில் விவரிக்கப்பட்ட வேறேதேனும் துணைமைப்பொருள் தொடர்பாகப் பதிவைப் பயனற்றதாக்குதலாகாது.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காக, ''குறைபாடு'' என்பது, பிழையான தனித்துவமான அடையாளங்காண் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் ஒழுங்கீனத்தை, விட்டுவிடுகையை அல்லது பிழையை உள்ளடக்கும்.

*பதிவுசெய்யப்பட்ட நிதியளிப்புக் கூற்றைத் திருத்துதல்*

**54.** (1) பதிவுசெய்யப்பட்ட நிதியளிப்புக் கூற்றொன்று, அது முடிவுறுமுன்னர் எந்நேரத்திலும், திருத்தக் கூற்றொன்றைக் கோப்பிடுவதன்மூலம் திருத்தப்படலாம்.

(2) திருத்தக் கூற்றொன்று, பதிவாளரினால் அதற்கு ஒரு தேதியும், நேரமும், இலக்கமும், குறித்தளிக்கப்படும் போது பதிவுசெய்யப் படுகின்றது.

*பதிவை நீடித்தல் அல்லது பொறுப்பு விடுவித்தல்*

**55.** (1) ஒரு நிதியளிப்புக் கூற்றின் பதிவு, அது முடிவுறுமுன்னர் எந்நேரத்திலும் ஒரு திருத்தக் கூற்றைக் கோப்பிடுவதன்மூலம் நீடிக்கப்படலாம் அல்லது பொறுப்புவிடுவிக்கப்படலாம்.

(2) நீடிக்கப்பட்டவொரு பதிவு, பின்வருவனவாறு பயனுறுவதாகத் தொடர்ந்திருத்தல் வேண்டும்:-

(அ) திருத்தக் கூற்றில் குறித்துரைக்கப்பட்ட தேதிவரை; அல்லது

(ஆ) பதிவு பொறுப்புவிடுவிக்கப்படும் தேதிவரை.

(3) முன்னுரிமையைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக, நீடிக்கப்பட்ட பதிவொன்றுக்கான பயனுறு காலமும் தேதியும் அதன் தொடக்கப் பதிவுக்காலமும் தேதியுமாதல் வேண்டும்.

ஒரு நிதியளிப்புக் கூற்றுக்கான திருத்தத்தை நிராகரித்தல்

**56.** (1) ஒரு திருத்தக் கூற்றுத் தொடர்பாக இச்சட்டத்தினால் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்கு விதிகளினால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளை திருப்திப்படுத்தாத அத்திருத்தக் கூற்று, பதிவாளரினால் நிராகரிக்கப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக, திருத்தக் கூற்றொன்று 49ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவிற் குறித்துரைக் கப்பட்ட காரணங்களுள் எவற்றுக்காகவும் பதிவாளரினால் நிராகரிக்கப்படலாம்.

கைமாற்றுகை பற்றிய அறிவித்தல்

**57.** (1) ஒரு பிணைப்பொறுப்புரிமை தொடர்பாகப் பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர் துணைமைப் பொருளிலான அக்கறையைக் கைமாற்றுமிடத்து, அத்தகைய கைமாற்றுகையை வெளிக்காட்டுகின்ற திருத்தக் கூற்றொன்று கோப்பிடப்படலாம்.

(2) இரண்டாம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட கொடுக்கல் வாங்கலின் விடயப்பொருளாகவுள்ள ஒரு பிணைப் பொறுப்புரிமையின் அல்லது பெறுதகவுகளின் கைமாற்றுணி, ஒரு நிருவாகி அல்லது ஒழித்துக்கட்டுநர் அல்லது 5 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆள் என்போருக்கெதிராக, பதிவின் பயனுறுதன்மையைத் தொடர்வதற்கெனத் திருத்தக் கூற் றொன்றைக் கோப்பிடுவதற்குத் தேவைப்படுத்தப்படலாகாது.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் திருத்தக் கூற்றொன்று கோப்பிடப் பட்டு ஆனால் துணைமைப்பொருளின் பாகத்திலான அக்கறை கைமாற்றப்படுமிடத்து, கைமாற்றப்படுகின்ற துணைமைப்பொரு ளின் பாகத்திலான அக்கறையின் விவரணத்தை அக்கூற்றானது உள்ளடக்குதல் வேண்டும்.

(4) ஒரு பிணைப்பொறுப்புரிமையின் கைமாற்றத்தை வெளிகாட்டுகின்ற திருத்தக் கூற்று, கைமாற்றத்துக்குமுன்னர் அல்லது பின்னர் கோப்பிடப்படலாம்.

(5) திருத்தக் கூற்று பதிவுசெய்யப்பட்டவுடன், கைமாற்றுணி இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) நிறைவாக்கப்படாத பிணைப்பொறுப்புரிமையொன்று தொடர்பாகப் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர் துணைமைப்பொருளிலான அக்கறையைக் கைமாற்றுமிடத்து, கைமாற்றுணி பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவராக வெளிக்காட்டப்படும் நிதியளிப்புக் கூற்றொன்று கோப்பிடப்படலாம்.

**58.** (1) பிணைப்பொறுப்புரிமையொன்று பிணைப்பொறுப் பளிக்கப்பட்ட திறத்தவரினால் வேறோராளின் அக்கறைக்குக் கீழமைந்ததாக்கப்பட்டிருப்பின், அத்தகைய கீழமைவை வெளிக் காட்டுகின்ற திருத்தக் கூற்றொன்று கோப்பிடலாம். *கீழமைவு பற்றிய அறிவித்தல்*

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட திருத்தற் கூற்றொன்று, பிணைப்பொறுப்புரிமை தொடர்பான நிதியளிப்புக் கூற்றின் பதிவு காலாவதியாகு முன்னர் கோப்பிடப்படலாம்.

**59.** (1) ஒரு கட்டணக் கொடுப்பனவு தொடர்பான ஏதேனும் தேவைப்பாடு உட்பட, அத்தகைய முறையில் விதித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைக்கு அல்லது விதிவிலக்குக்கு அமைய, எவரேனும் ஆள் இடாப்பைத் தேடுகை யிடலாம். தேடுகையிடுதல்கள்

(2) பதிவாளரினால் சான்றுபடுத்தப்பட்ட தேடுகையிடுதலின் பெறுபேறு, அதன்கண் அடங்கியுள்ள உள்ளீட்டின் முதற்றோற்ற எண்பிப்பாக ஏதேனும் நீதிமன்றத்தில் சான்றாகப் பெறப்படலாம்.

*கடனாளி முதலியவர்கள் திருத்தக் கூற்றைத் தேவைப்படுத்தலாம்*

**60.** (1) நிதியளிப்புக் கூற்றொன்று பதிவுசெய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ள பட்டியலின் நிரை I இல் தரப்பட்ட நிபந்தனைகளுள் ஒன்று திருப்திசெய்யப்படுமிடத்து, கடனாளி அல்லது நிதியளிப்புக் கூற்றில் துணைமைப்பொருளின் விவரணத்தினுள் அடங்குகின்ற ஆதனத்தில் அக்கறைகொண்டுள்ள எவரேனுமாள், நிதியளிப்புக் கூற்றில் பெயர்குறிப்பிடப்படும் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவருக்கு அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட முகவருக்கு (இதனகத்துப்பின்னர் ''தேவைப்பாட்டு அறிவித்தல்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) அறிவித்தலை எழுத்தில் கொடுக்கலாம்.

(2) தேவைப்பாட்டு அறிவித்தல்-

(அ) திருப்திசெய்யப்பட்ட நிபந்தனையைக் குறித் துரைத்தல் வேண்டும்;

(ஆ) பட்டியலின் நிரை I இல் தரப்பட்டுள்ள நிபந்தனைக்கு நேரொத்ததாகவுள்ள, கீழே தரப்பட்ட பட்டியலின் நிரை II இல் சுட்டிக்காட்டப்பட்டவாறான பயனைக் குறித்துரைக்கின்ற திருத்தக் கூற்றைக் கோப்பிடும்படி பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரைத் தேவைப்படுத்துதல் வேண்டும்; அத்துடன்

(இ) தேவைப்பாட்டு அறிவித்தலுக்கு இணங்கி யொழுகத் தவறுதல், அறிவித்தலைக் கொடுக்கும் ஆள் தோதான திருத்தக் கூற்றைக் கோப்பிடுவதனை விளைவிக்கலா மெனப் பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவருக்கு அறிவித்தல் வேண்டும்.

## பட்டியல்

| நிரை I<br>நிபந்தனை | நிரை II<br>பயன் |
|---|---|
| நிதியளிப்புக் கூற்று எந்தப் பிணைப்பொறுப்பு உடன் படிக்கைகள் தொடர்பானதோ அந்தப் பிணைப்பொறுப்பு உடன்படிக்கைகள் எல்லா வற்றின் கீழுமான கடப்பாடுகள் புரியப்பட் டுள்ளனவென்று. | பதிவைப் பொறுப்பு விடுவிப்ப தற்கு. |
| பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர் நிதியளிப்புக் கூற்றில் விவரிக்கப்பட்ட துணைமைப் பொருளின் பாகத்தை அல்லது துணைமைப் பொருளின் எல்லாவற்றையும் விடுவிப்ப தற்கு உட்பட்டுள்ளாரென்று. | பிணைப்பொறுப்பு உடன் படிக்கையின் நியதிகளைப் பிரதிபலிக்கும் வகையில் பதிவைத் திருத்துவதற்கு அல்லது பொறுப்புவிடுப்ப தற்கு. |
| நிதியளிப்புக் கூற்றில் துணை மைப் பொருளின் விவரணம், பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவருக்கும் கடனாளிக்கு மிடையேயான பிணைப் பொறுப்பு உடன்படிக்கையின் கீழ் துணைமைப்பொருளாக விராத ஓர் இனத்தை அல்லது ஆதனத்தின் வகையை உள்ள டக்குகின்றதென்று. | பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவருக்கும் கடனாளிக்கு மிடையேயான பிணைப் பொறுப்பு உடன்படிக்கை யின்கீழ் துணைமைப் பொரு ளாகவிராத இனங்களை அல்லது ஆதனத்தின் வகைக ளைத் தவிர்ப்பதற்குச் துணை மைப்பொருள் விவரணத்தைக் திருத்துவதற்கு. |
| பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவராகவும் கடனாளியாக வும் நிதியளிப்புக்கூற்றில் பெயர் குறிப்பிடப்பட்ட ஆட்களுக்கிடையே பிணைப்பொறுப்பு உடன்படிக் கையெதுவும் இல்லையென்று. | பதிவைப் பொறுப்புவிடு விப்பதற்கு அல்லது கடனாளி தனிக் கடனாளியாகவிராத விடத்து, பதிவைத் திருத்து வதற்கு. |

(3) தேவைப்பாட்டு அறிவித்தலொன்றைக் கொடுக்கின்ற ஆள் தனிக் கடனாளியாகவிராதவிடத்து, பிணைப் பொறுப் பளிக்கப்பட்ட கூற்று எந்த வேறு ஒவ்வொரு கடனாளியுடனும் தொடர்புபட்டதோ அந்த வேறு ஒவ்வொரு கடனாளிக்கும், பிணைப்பொறுப் பளிக்கப்பட்ட திறத்தவருக்குத் தேவைப்பாட்டு அறிவித்தல் வழங்கப்பட்டதிலிருந்து ஐந்து நாட்களினுள், தேவைப்பாட்டு அறிவித்தலின் பிரதியொன்றைக் கொடுப்பதற்கு அவர் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) தேவைப்பாட்டு அறிவித்தலொன்று வழங்கப்பட்ட பின்னர் பதினான்கு வேலை நாட்களினுள் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர் -

(அ) அத்தகைய அறிவித்தலுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து; அல்லது

(ஆ) (i) தேவைப்பாட்டு அறிவித்தல் எந்தப் பதிவு தொடர்பானதோ அந்தப் பதிவைப் பேணுவதற்கான கட்டளையொன்றைப் பெறுவதற்குத் தோதான நியாயாதிக்கத்தைக் கொண்ட ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகள் தொடங்குவதற்குத் தவறுமிடத்து;

(ii) அவ்வறிவித்தலை வழங்கிய ஆளுக்கு அறிவிக்கத் தவறுமிடத்து; அத்துடன்.

(iii) வழக்கிலக்கம் மற்றும் வழக்கு நடவடிக்கைகள் தொடங்கப்பட்ட தேதி பற்றிய தகவல்களைப் பதிவாளரிடம் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் கோப்பிடுவதற்குத் தவறுமிடத்து,

தேவைப்பாட்டு அறிவித்தலை வழங்கிய ஆள், அத்தகைய அறிவித்தல்மூலம் வேண்டுகோள் விடுவிக்கப்பட்டவாறாகத் திருத்தக் கூற்றொன்றைக் கோப்பிடலாம்.

(5) முப்பது வேலை நாட்களினுள் அல்லது நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய நீடித்த காலப்பகுதியினுள் (4)ஆம் உட்பிரிவின்கீழ் தொடங்கப்பட்ட ஏதேனும் வழக்கு

நடவடிக்கையில் நீதிமன்றம் கட்டளையொன்றைக் கொடுக்காதவிடத்து, தேவைப்பாட்டு அறிவித்தலை வழங்கிய ஆள், அத்தகைய அறிவித்தல்மூலம் வேண்டுகோள்விடுக்கப்பட்டவாறாகத் திருத்தக் கூற்றொன்றைக் கோப்பிடலாம்.

(6) நான்காம் மற்றும், (5) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், நம்பிக்கைப்பொறுப்பு வழக்கொன்றுக்கு ஏற்புடையனவாதலாகாதென்பதுடன், அத்தகையவொரு வழக்கில், தோதான நியாயாதிக்கமுள்ள நீதிமன்றம் ஒன்று, தேவைப்பாட்டு அறிவித்தலை வழங்குகின்ற ஆளினால் அதற்கெனச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மேல், பின்வருமாறாயின், பதிவு திருத்தப்பட வேண்டும் அல்லது பொறுப்புவிடுவிக்கப்பட வேண்டுமெனவும் பணிக்கலாம்:-

(அ) தேவைப்பாட்டு அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை திருப்திப்படுத்தப்படின்; அத்துடன்

(ஆ) கட்டளைக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காகப் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர் தேவைப்பாட்டு அறிவித்தலுக்கு இணங்கியொழுகாதிருப்பின்,

அத்துடன் நீதிமன்றம், அதனால் வழங்கப்பட்ட பணிப்புக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காகத் தோதானதென அது கருதுகின்றவாறான அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

(7) இப்பிரிவின்கீழ் வழங்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட தேவைப்பாட்டு அறிவித்தல், விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய முறையில் வழங்கப்படுதல் வேண்டும்.

(8) இப்பிரிவின் நோக்கத்துக்காக, ''நம்பிக்கைப்பொறுப்பு வழக்கு'' என்பது, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர் ஒரு நம்பிக்கைப்பொறுப்பாளரென நிதியளிப்புக் கூற்று வெளிக்காட்டுகின்ற ஒரு வழக்கு என்று பொருளாகும்.

பிழையான கோப்பிடுதலுக்காகச் சேதவீடுகளுக்கு உரித்தாதல்

**61.** (1) எவரேனுமாள் நியாயமான காரணமின்றி–

(அ) உண்மையாக இராதுள்ளதான உடன்படிக்கையொன்றின் கீழான பிணைப்பொறுப்புரிமை ஒன்றுள்ளமையைச் சான்றுப்படுத்துகின்ற நிதியளிப்புக் கூற்றொன்றைக் கோப்பிடுமிடத்து; அல்லது

(ஆ) நிதியளிப்புக் கூற்றைக் கோப்பிடுவதற்குக் கடனாளி உண்மையாகச் சம்மதமளித்திராதபோது, அத்தகைய நிதியளிப்புக் கூற்றைக் கோப்பிடுவதற்குக் கடனாளி சம்மதமளித்துள்ளாரென உறுதிப்படுத்துகின்றதான அத்தகைய நிதியளிப்புக் கூற்றைக் கோப்பிடுமிடத்து,

கடனாளி, அத்தகைய கோப்பிடுதலிலிருந்து விளையும் சாத்தியமுள்ளதென நியாயமானமுறையில் எதிர்நோக்கப் படத்தக்கதாகவிருந்த கடனாளிக்கு விளைவிக்கப்பட்ட ஏதேனும் இழப்பு அல்லது சேதத்துக்காக அவ்வாளிடமிருந்து சேதவீடுகளை அறவிடுவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர், 52 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் சரிபார்த்தற் கூற்றின் பிரதியொன்றைப் பெற்றதிலிருந்து பத்து வேலைநாட்களினுள் கடனாளிக்கு அதன் பிரதியொன்றை அளிப்பதற்குத் தவறுமிடத்து, அத்தகைய தவறுதலிலிருந்து விளையும் சாத்தியமுள்ளதென நியாயமான முறையில் எதிர்நோக்கப்படத்தக்கதாகவிருந்த ஏதேனும் இழப்புக்காக அல்லது சேதத்துக்காக அத்தகைய ஆளிடமிருந்து சேதவீடுகளை அறவிடுவதற்கான உரிமையைக் கடனாளி கொண்டிருத்தல் வேண்டும்.

ஒரு பெறுநர் முதலியவர்களின் நியமனம் பற்றிப் பணியகத்துக்கு அறிவிப்பதற்கான தேவைப்பாடு

**62.** (1) (அ) கம்பனியொன்றின் ஆதனத்துக்கு என ஒரு பெறுநரை அல்லது ஒரு பெறுநரையும் முகாமையாளரையும் நியமிப்பதற்கான கட்டளையைப் பெறுகின்றவரான; அல்லது

(ஆ) ஒரு கம்பெனியின் ஆதனத்திற்கு என ஒரு பெறுநரை அல்லது ஒரு பெறுநரையும் முகாமையாளரையும் சாதனமொன்றில் அடங்கியுள்ள தத்துவங்களின்கீழ் நியமிக் கின்றவரான,

ஆளொருவர், அத்தகைய நியமனத்தைச் செய்வதிலிருந்து ஏழு நாட்களினுள் பதிவாளரிடம் அத்தகைய நியமனத்தைப் பதிவுசெய்வதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஒரு சாதனத்தின் பயனாக நியமிக்கப்பட்டவரும் அத்தகையவராகச் செயலாற்றாதொழிகின்றவருமான ஒரு கம்பெனியின் ஆதனத்தின் ஒரு பெறுநர் அல்லது பெறுநரும் முகாமையாளரும் திருத்தக் கூற்றொன்றைக் கோப்பிடுவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்று விதித்துரைக்கப்பட்ட படிவத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன், விதித்துரைக்கப்பட்ட முறையில் வழங்கப்படுதலும் வேண்டும்.

(4) இப்பிரிவினால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்றவரான ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், நீதிவான் நீதிமன்ற மொன்றின் முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

ஒரு நிதியளிப்புக் கூற்றைக் கோப்பிடுதல், ஓர் அறிவித்தலாக அமையமாட்டாது

**63.** (1) ஒரு நிதியளிப்புக் கூற்றை அல்லது திருத்தக் கூற்றைக் கோப்பிடுதல், எவரேனுமாளுக்கு ஆக்கப்பூர்வமான அறிவித்தலாக அல்லது அது உள்ளமை பற்றி அல்லது அதன் உள்ளீடுகள் பற்றி உண்மையாக அவர் அறிந்துள்ளமையாக அமைதலாகாது.

(2) தொழிலின் சாதாரணநெறியில் ஏதேனும் துணைமைப் பொருளைக் கொள்வனவு செய்கின்ற கொள்வனவாளர் பின்வருவனபற்றி விசாரணை செய்வதற்குத் தேவைப்படுத் தப்படலாகாது-

(அ) துணைமைப்பொருள் தாக்கீடுசெய்யப்பட்டுள்ளதா அல்லது அடைமானம் வைக்கப்பட்டுள்ளதா அல்லது பெறுதகவுகளின் விடயத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளதா என்பது; அல்லது

(ஆ) கையுதிர்ப்பானது தாக்கீட்டின் நியதிகளின் மீறுகையாக அமைகின்றதா என்பது.

## பாகம் VII

## பொது ஏற்பாடுகள்

இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடனான ஒவ்வாமைகள்

**64.** (1) ஒரு பிணைப்பொறுப்பு உடன்படிக்கையின்கீழ் எழுகின்ற உரிமைகளையும் கடப்பாடுகளையும் ஆளுகின்ற எவையேனும் சட்டப்படியான அல்லது ஒப்புரவு முறையிலான நெறிகள் அவை இச்சட்டத்திலுள்ள ஏதேனும் ஏற்பாட்டுடன் ஒவ்வாதிருக்கும் அளவுவரைதவிர, தொடர்ந்து ஏற்புடையற்பாலனவாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் சட்டத்தின்கீழ் பிணைப்பொறுப்பு உடன்படிக்கையின்கீழ் எழுகின்ற எல்லாக் கடப்பாடுகளும், நல்லெண்ணத்துடன் வர்த்தகரீதியில் நியாயமானவொரு முறையிலும் பிரயோகிக்கப்படுதலும் நிறைவேற்றப்படுதலும் வேண்டும்.

சேதவீடுகளுக்கான வழக்கு

**65.** இச்சட்டத்தினால் ஆளொருவரின்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் கடப்பாட்டை அத்தகைய ஆள் நியாயமான காரணமின்றி நிறைவேற்றப்படுவதற்குத் தவறினால், அத்தகைய கடப்பாடு எவ்வாளுக்குப் சேருமதியானதோ அவ்வாள், அத்தகைய தவறுதலிலிருந்து விளைந்திருக்கக்கூடியதாக நியாயமானமுறையில் எதிர்நோக்கப்படற்பாலதாக அத்தகைய ஆளுக்கு விளைவிக்கப்பட்ட ஏதேனும் சேதத்துக்காக அல்லது இழப்புக்காக நட்டஈடு அளிக்கப்படுவதற்கு உரிமை யுடையவராதல் வேண்டும்.

துணைமைப் பொருளுக்கான முன்னுரிமை களையும் உரித் துடைமை களையும் தீர்மானிப்பதற்கு நீதிமன்றத்துக்குள்ள தத்துவம்

**66**. துணைமைப்பொருளில் அக்கறையொன்றைக் கொண்ட ஆளொருவரினால் தோதான நியாயாதிக்கங்கொண்டுள்ள நீதிமன்றத்துக்குச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மேல் அத்தகைய நீதிமன்றம் பின்வரும் கட்டளைகளுள் ஒன்றை அல்லது இரண்டையும் ஆக்குவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்:-

(அ) துணைமைப்பொருளுக்கான முன்னுரிமை அல்லது உரித்துடைமை தொடர்பான கேள்வியைத் தீர்மானிப்பதற்கான கட்டளை ஒன்று;

(ஆ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட எவையேனும் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுவதற்காக இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட காலப்பகுதிகளை நிபந்தனையுடன் அல்லது வேறுவகையாக நீடிக்கின்ற அல்லது சுருக்குகின்ற கட்டளை ஒன்று.

அறிவித்தல் களைச் சேர்ப்பித்தல்

**67**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நிறைவேற்றப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட எவையேனும் அறிவித்தல்களைச் சேர்ப்பித்தலானது, (101ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையில் அடங்கியுள்ள அதுபற்றிய இயைபான ஏற்பாடுகளுக்கிணங்க நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடு களுடனான முரண்பாடுகள்

**68**. (1) இச்சட்டத்தில் குறிப்பாக வேறுவகையில் ஏற்பாடு செய்யப்பட்டவாறுதவிர, இச்சட்டத்தினதும் வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கிடையே எதேனும் முரண்பாடு ஏற்படும் பட்சத்தில், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இச்சட்டத்துக்கும் பாவனையாளர்களைப் பாதுகாப்பதற்காக ஏற்பாடுசெய்கின்ற வேறேதேனும் சட்டத்தினது ஏற்பாடுகளுக்கு மிடையே முரண்பாடு ஏற்படும் பட்சத்தில், அத்தகைய வேறு சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

உறுப்பினர்கள், பதிவாளர் மற்றும் அலுவலர்களும் ஊழியர்களும் பகிரங்க சேவையாளர் களாகக் கருதப்படுதல்

**69.** சபையின் உறுப்பினர்களும் பதிவாளரும் அதிகாரசபையின் ஏனைய அலுவலர்களும் ஊழியர்களும், (19ஆம் அத்தியாய மான) தண்டனைச் சட்டக்கோவையின் பொருளுக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

அதிகார சபையானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல்

**70.** அதிகாரசபையானது, 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பொருளுக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

செலவுகள், அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல்

**71.** (1) அதிகாரசபையினால் அல்லது அதற்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது வழக்குநடவடிக்கையில் அதிகாரசபையினால் உறப்பட்ட எல்லாச் செலவுகளும் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட ஏதேனும் தொகை அதிகாரசபையின் நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(2) விடயத்துக்கேற்ப, இச் சட்டத்தின்கீழ் அல்லது சபையினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்பின்மீது சபையின் உறுப்பினர், அதிகாரசபையின் பதிவாளரினால் அல்லது எவரேனும் அலுவலரினால் அல்லது ஊழியரினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில், அத்தகைய ஆளினால் அல்லது அவருக்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது வழக்குநடவடிக்கையில் அவர்களினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப் பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவுகள் அத்தகைய துடர்ச்சியில் அல்லது வழக்குநடவடிக்கைகளில் அவ்வாளினால் அறவிடப்பட்டாலொழிய, அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்

**72.** (1) அமைச்சர் காலத்துக்குக்காலம் இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படுவதற்கு தேவைப்படும் ஏதேனும் கருமம் தொடர்பில் அல்லது இச்சட்டத்தின்கீழ் எது ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டதோ அது தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், வர்த்தமானியில் அதன் வெளியீட்டின் பின்னர் மூன்று மாதங்களினுள் பாராளுமன்றத்தின் முன்னர் அதன் அங்கீகாரத்துக்காக இடப்படுதல் வேண்டும்.

(4) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அதற்கு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன் கீழ் முறையாக செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியன்று அவ்வாறு ஒழித்துவிடப்பட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

விதிகள்

**73.** (1) அதிகாரசபையானது இச்சட்டத்தின்கீழ் எக்கருமங்கள் தொடர்பில் விதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதன் குறிக்கோளை எய்தும் நோக்கத்துக்காக அவசியமென அது கருதக்கூடுமோ அக்கருமங்கள் தொடர்பில் விதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும் (1)ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், அதிகாரசபையானது, பின்வரும் கருமங்கள் தொடர்பில் விதிகளை ஆக்கலாம்:-

(அ) பிணைப்பொறுப்புரிமைகளையும் தீர்ப்புக்கடன் கொடுநர்களையும் பதிவுசெய்வதற்கான விண்ணப் பத்தின் முறையும் விதமும்; அத்துடன்

(ஆ) அதிகாரசபையினால் வழங்கப்படுகின்ற சேவைகள் தொடர்பில் அறவிடப்படவேண்டிய கட்டணங்களின் அல்லது விதிப்பனவுகளின் தொகை.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபையினால் ஆக்கப்பட்ட எல்லா விதிகளும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு அதன் பின்னர் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

## பாகம் VIII

### நீக்கங்களும் பேணல்களும்

நீக்கமும் பேணல்களும்

**74.** (1) (இதனகத்துப்பின்னர் "நீக்கப்பட்ட சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இரண்டாயிரத்து ஒன்பதாமாண்டின் 49ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

(2) நீக்கப்பட்ட சட்டம் எவ்வாறிருப்பினும்,-

(அ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட பிணைப் பொறுப்புரிமை, நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முன்னர் நாளன்றுள்ள இச்சட்டத்தின் 4ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளைத் திருப்திப்படுத்தும் நோக்கத் துக்காக, செல்லுபடியான ஒரு பிணைப்பொறுப்புரி மையாகத் தொடர்ந்திருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) 2024 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, ஆவணப் பதிவு (திருத்தச்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் நியதிகளின் படி இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டதான பின்வருவனவற்றை உருவாக்குகின்ற சாதனம் தொடர்பில், நீக்கப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ள

சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்ட ஏதேனும் சிவில் அல்லது குற்றவியல் நடவடிக்கைமுறையானது-

(i) அடைமானமொன்று, ஈடு அல்லது ஏதேனும் அசையும் ஆதனத்தின் விற்பனை பட்டியல்; அல்லது

(ii) (அ) ஏதேனும் அசையாத ஆதனத்தின் பொருத்தின் அக்கறையொன்று; அல்லது

(ஆ) ஒப்படைப்பானது அசையாத ஆதனத்தில் சாட்டுணிக்காரரின் அக்கறையை தெரிவிக்காதவிடத்து அல்லது கைமாற்றாதவிடத்து, ஏதேனும் அசையாத ஆதனத்தின் ஈடு, விதிப்பனவு அல்லது குத்தகையொன்றின்கீழ் கொடுப்பனவுக்கான உரிமையொன்றின் ஒப்படைப்பொன்று,

இச்சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்டதாக கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் IX

## பொருள்கோடல்

**75.** (1) இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய- பொருள் கோடல்

''சொத்துவளர்ச்சிகள்'' என்பது, வேறு பண்டங்களில் நிறுவப்படுகின்ற அல்லது அவற்றுக்குப் பொருத்தப்படுகின்ற பண்டங்கள் என்று பொருளாகும்;

''கணக்கு'' என்பது, கடப்பாடானது புரிகையினால் ஈட்டிப் பெறப்பட்டிருப்பினுஞ்சரி அல்லதாயினுஞ்சரி, தட்டுமுட்டுப்பொருட் பத்திரத்தினால், ஒரு பிணைப் பொறுப்பினால் அல்லது ஒரு சாதனத்தினால் சான்றுப்படுத்தப்படாத பணவகையான கடப்பாடு என்று பொருளாகும்;

"கொள்ளுதல் பிணைப்பொறுப்புரிமை" என்பது–

(அ) ஒரு துணைமைப்பொருளின் முழு விலையினதும் அல்லது அதன் பகுதியினதும் கொடுப்பனவுக்குப் பிணைப்பொறுப்பளிப்பதற்கு அதில் எடுக்கப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்டவொரு பிணைப்பொறுப்புரிமை;

(ஆ) பெறுமதியானது உரிமைகளைக் கொள்ளுவதற்குப் பிரயோகிக்கப்படும் அளவுக்கு துணைமைப் பொருளிலான உரிமைகளைக் கொள்ளுவதற்குக் கடனாளியை இயலச் செய்யும் நோக்கத்துக்காகப் பெறுமதி கொடுக்கின்றவரான ஆளொருவரினால் துணைமைப் பொருளில் எடுக்கப்பட்டவொரு பிணைப் பொறுப்புரிமை; அல்லது

(இ) ஓராண்டுக்கு மேற்பட்டவொரு காலத்துக்கான குத்தகையின் கீழ் பண்டங்களின் குத்தகை கொடுநரினது ஓர் அக்கறை,

என்று பொருளாகும், ஆனால் விற்பனையாளரினாலான விற்பனைக் கொடுக்கல்வாங்கலை மற்றும் விற்பனையாளருக்குக் குத்தகையைத் திருப்பிக்கொடுத்தலை உள்ளடக்காது;

"திருத்தக் கூற்று" என்பது, இச்சட்டத்தினாலும் அதன் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளினாலும் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளைத் திருப்தி செய்வதும் இச்சட்டத்தின் 54, 55, 57, 58, அல்லது 60ஆம் பிரிவின்கீழ் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவரினால் அல்லது அவரது முகவரினால் கோப்பிடப்பட்டதுமானவொரு கூற்று என்று பொருளாகும்;

"பணியகம்" என்பது, 1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கைக் கடன் தகவல் பணியகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைக் கடன் தகவல் பணியகம் என்று பொருளாகும்;

"சான்றுப்படுத்தப்பட்ட பிணைப்பொறுப்பு" என்பது-

(அ) சான்றிதழின் உடைமைகொண்டுள்ள ஆள் பிணைப்பொறுப்புக்களுக்கு உரித்துடைய அவ்வாள் என ஏற்பாடுசெய்கின்றது; அல்லது

(ஆ) பிணைப்பொறுப்புகளுக்கு உரித்துடைய ஆளை அடையாளங்காண்கின்ற, சான்றிதழினால் பிரதி நிதித்துவப்படுத்தப்பட்ட பிணைப்பொறுப் புரிமை என்று பொருளாகும்;

"தட்டுமுட்டுப்பொருட் பத்திரம்" என்பது குறித்த பண்டங்களில் அல்லது அவற்றின் குத்தகையின் பணவகையான கடப்பாடு மற்றும் பிணைப்பொறுப்புரிமை ஆகிய இரண்டையும் சான்றுப்படுத்துகின்ற எழுத்திலான ஓர் ஆவணம் என்று பொருளாகும்;

"துணைமைப்பொருள்" என்பது, ஒரு பிணைப்பொறுப் புரிமைக்கு அமைந்ததாகவுள்ள ஏதேனும் அசைவுள்ள ஆதனம் என்று பொருளாகும்;

"வர்த்தகரீதியில் நியாயமான" என்பது, நிலவுகின்ற நிலைமைகளைக் கவனத்துட்கொண்டு ஒரு துணைமைப் பொருளின் மிகச்சிறந்த சந்தை விலையைப் பெறுவதற்குத் திட்டமிடப்பட்டதாக, நிலவுகின்ற சூழ்நிலைகளின்படி நியாயமானதெனக் கருதப்படமுடியுமான அத்தகைய நிலைமைகளின் கீழ் ஒரு துணைமைப்பொருளை கையுதிர்ப்பதிலான நடவடிக்கைமுறையைக் கடைப் பிடித்தல் என்று பொருளாகும்;

"பாவனையாளர் பண்டங்கள்" என்பது முதற்படியாக நுகர்வதற்காக அல்லது ஏதேனும் வீட்டுத்தேவை நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட அல்லது கொள்ளப்பட்ட பண்டங்கள் என்று பொருளாகும்;

"கடனாளி" என்பது-

(அ) பிணைப்பொறுப்பளிக்கப்பட்டவொரு கொடுப்பனவு போகுமதியாகவுள்ள அல்லது கடப்பாடு புரியப்படவுள்ள மற்றும் துணைமைப்பொருளில் உரிமைகளை சொந்தமாக வைத்திருக்கின்ற அல்லது கொண்டுள்ள ஆளொருவர்;

(ஆ) ஒரு வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் கீழான கொள்வனவாளரொருவர் அல்லது ஓராண்டுக்கு மேற்பட்டவொரு காலத்துக்கான குத்தகையொன்றின் கீழான குத்தகை பெறுநரொருவர்;

(இ) உரித்து வாசகத்தை தக்கவைத்திருப்பதற்கமைய அல்லது நிபந்தனையுடனான விற்பனையின்கீழ் பண்டங்களைக் கொள்ளுகின்ற கொள்வனையாளரொருவர்; அத்துடன்

(ஈ) ஒரு கணக்கின் அல்லது தட்டுமுட்டுப் பொருட்பத்திரத்தின் கைமாற்றுநரொருவர்

என்று பொருளாகுமென்பதுடன், சந்தர்ப்பம் அவ்வாறு அனுமதிக்குமிடத்து, துணைமைப்பொருளில் கடனாளியின் அக்கறையினது கைமாற்றம் பெறுநரொருவரையும் உள்ளடக்கும்;

"தவறுகை" என்பது-

(அ) வருமதியானபோது பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடப்பாட்டைச் செலுத்துவதற்கு அல்லது வேறுவகையாகப் புரிவதற்குத் தவறுதல்; அல்லது

(ஆ) பிணைப்பொறுப்பு உடன்படிக்கையின் நியதிகளின் கீழ் எந்தச் சம்பவம் அல்லது சூழ்நிலைத்

தொகுதியின் மீது பிணைப்பொறுப்புரிமை வலுவுக் கிடப்படற்பாலதாக வருகின்றதோ அந்த ஏதேனும் சம்பவம் அல்லது சூழ்நிலைத் தொகுதி ஏற்படுதல் என்று பொருளாகும்;

"பெறுமதி குறைதல்;" என்பது, சேதமடைந்துள்ள ஏதேனும் ஆதனத்தினது பெறுமதியின் முன்னரும் பின்னருமான தற்கிடையேயான வித்தியாசம் என்று பொருளாகும்;

"உரித்தாவணம்;" என்பது-

(அ) அடையாளம் காணப்படத்தக்க அல்லது அடையாளங்காணப்படத்தக்கவொரு திரண்மத்தின் அளிமாற்றான பாகங்களாகவுள்ளவையும் ஒப்படைபெறுநரின் உடைமையிலுள்ளவையுமான பண்டங்களை மேவுகின்றதும்; அத்துடன்

(ஆ) தொழிலின் சாதாரண நெறியில் அதனை உடைமையில் வைத்திருக்கும் ஆள், ஆவணத்தையும் அது மேவுகின்ற பண்டங்களையும் பெறுவதற்கும், வைத்திருப்பதற்கும், கையுதிர்ப்பதற்கும் உரித்துடையவரென நிலைநாட்டுவதாகக் கணிக்கப்படுகின்றதும்

ஆன, ஒப்படைபெறுநரினால் வழங்கப்பட்ட அல்லது அவருக்கு முகவரியிடப்பட்ட ஓர் ஆவணம் என்று பொருளாகும்;

"உபகரணங்கள்;" என்பது, பொருட்பதிவேடாக அல்லது பாவனையாளர் பண்டங்களாக இராத பண்டங்கள் என்று பொருளாகும்;

"நிதியளிப்புக் கூற்று" என்பது, 50ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் தேவைப்பட்ட தகவல்களைக் கொண்டுள்ள ஒரு கூற்று என்று பொருளாகுமென்பதுடன், சந்தர்ப்பம் அவ்வாறு

அனுமதிக்குமிடத்து, ஒரு திருத்தக்கூற்றையும் (117ஆம் அத்தியாயமான) ஆவணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஓர் ஆவணத்தையும், அத்தகைய பதிவுடன் இணைந்த அல்லது அத்தகைய பதிவை நிவர்த்தி செய்வதற்கு, திருத்துவதற்கு அல்லது புதுப்பிப்பதற்குப் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் ஆவணத்தையும் உள்ளடக்கும்;

"அளிமாற்றான துணைமைப்பொருள்" என்பது, அதே தன்மையினதான அல்லது வகையினதான இன்னொன்றுக்காக, முழுமையாக அல்லது பகுதியளவில் இலகுவாக பரிமாற்றத்தக்கனவாக அல்லது மாற்றீடு செய்யப்படத்தக்கனவாக இருக்கக்கூடியவாறான அத்தகைய தன்மையினவான அல்லது வகையினவான பண்டங்கள் என்று பொருளாகும்;

"எதிர்கால முற்பணம்" என்பது, ஒரு பிணைப்பொறுப்பு உடன்படிக்கையினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட ஏதேனும் பணத்தின், கடனின் அல்லது வேறு பெறுமதியின் முற்பணம் அது ஓர் ஈடுபாட்டைப் பின்பற்றி அளிக்கப்படினுஞ்சரி அல்லாதுவிடினுஞ்சரி, அத்தகைய முற்பணம் என்று பொருளாகும்;

"பண்டங்கள்;" என்பது, தட்டுமுட்டுப்பொருட் பத்திரம், உரித்தாவணங்கள், சாதனங்கள், பணம் மற்றும் முதலீட்டு ஆதனம் தவிர்ந்த அசைவுள்ள ஆதனம் என்று பொருளாகும் என்பதுடன், பொருத்திகள் வளர்கின்ற பயிர்கள், விலங்குகளின் பிறக்காத இளவிலங்குகள், வெட்டப்படவேண்டிய வெட்டுமரம் என்பவற்றையும் மற்றும் பிரித்தெடுக்கப்படவேண்டிய கனிப் பொருட்களையும் நீரகக்கரியங்களையும் உள்ளடக்கும்;

"சாதனம்;" என்பது-

(அ) (82ஆம் அத்தியாயமான) நாணய மாற்றுண்டியல்கள் கட்டளைச்சட்டத்தின் பொருட்களுக்குட்பட ஒரு நாணயமாற்றுண்டியல், வாக்குறுதிப்பத்திரம் அல்லது ஒரு காசோலை;

(ஆ) கடன்பத்திரத்தின்கீழ் அல்லது கடன்முற்பணத்தின் கீழ் கொடுப்பனவை உரிமைகோருவதன்மேல் அப்பத்திரம் அல்லது முற்பணம் ஒப்படைக்கப்பட வேண்டுமென அது கூறினால், அப்பத்திரம் அல்லது முற்பணம்; அத்துடன்

(இ) பணக்கொடுப்பனவுக்கான உரிமையை நிலைநாட்டுகின்றதும், தொழிலின் சாதாரண நெறியில் அவசியமான ஏதேனும் புறக்குறிப்பு அல்லது சாட்டுகையுடன் ஒப்படைப்பின் மூலம் கைமாற்றப்படுகின்ற வகையினதுமான வேறேதேனும் எழுத்துரு என்று பொருளாகும்,

ஆனால், தட்டுமுட்டுப்பொருட் பத்திரம், உரித்தாவணங்கள், சாதனங்கள், பணம் அல்லது முதலீட்டு ஆதனத்தின் ஒரு பாகமாகவமைகின்ற ஓர் எழுத்துருவை உள்ளடக்காது;

"அருவப்பொருள்;" என்பது, பண்டங்கள், தட்டுமுட்டுப் பொருட் பத்திரம், உரித்தாவணங்கள், சாதனங்கள், பணம் அல்லது முதலீட்டு ஆதனமாகவிராத, வழக்குக்குரிய தீணை உட்பட்ட அசைவுள்ள ஆதனம் என்று பொருளாகும்;

"பொருட்பதிவேடு" என்பது-

(அ) விற்பனைக்காக அல்லது குத்தகைக்காக ஆளொருவரினால் வைத்திருக்கப்பட்ட அல்லது ஒரு குத்தகைகொடுநரென்ற முறையில் அவ்வாளினால் குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ள;

(ஆ) சேவை ஒப்பந்தத்தின்கீழ் கொடுத்துதவப்பட வேண்டிய அல்லது கொடுத்துதவப்பட்டுள்ள;

(இ) மூலப்பொருட்களாகவுள்ள அல்லது நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலையாகவுள்ள; அல்லது

(ஈ) ஏதேனும் தொழிலில் அல்லது உயர்தொழிலில் பயன்படுத்தப்பட்ட அல்லது நுகரப்பட்ட கருப்பொருளாகவுள்ள

பண்டங்கள் என்று பொருளாகும்;

"ஓராண்டுக்கு மேற்பட்ட காலத்துக்கான குத்தகை" என்பது, கூட்டுமொத்தத்தில் ஓராண்டை விஞ்சுகின்ற அதே சொத்தின் தொடர்ச்சியான குறுகியகாலக் குத்தகைகளை உள்ளடக்கும், ஆனால் பின்வருவனவற்றை உள்ளடக்காது:-

(அ) பண்டங்களைக் குத்தகைக்கு கொடுத்தல் என்ற தொழிலில் கிரமமாக ஈடுபட்டிராதவொரு குத்தகை கொடுநரினாலான பண்டங்களின் குத்தகை;

(ஆ) பண்டங்கள், அசைவற்ற ஆதனத்தின் பயன்பாட்டுக்கும் துய்த்தலுக்கும் இடைவருவனவாகவிருக்குமிடத்து, அசைவற்ற ஆதனத்தின் குத்தகையினது பாகமாக வீட்டுத் தட்டுமுட்டுக்கலங்களின் அல்லது உபகரணங்களின் குத்தகை; அல்லது

(இ) குத்தகைக் காலத்தின் அளவைப் பொருட்படுத்தாது, விதித்துரைக்கப்பட்ட வகையினவான பண்டங்களின் குத்தகை;

"கனிப்பொருட்கள்;" என்பது, எண்ணெய், வாயு மற்றும் நீரகக்கரியங்களை உள்ளடக்கும்;

"அமைச்சர்" என்பது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நடைமுறைப்படுத்தல் எவ்வமைச்சருக்கு குறித்தளிக்கப் பட்டுள்ளதோ அவ்வமைச்சர் என்று பொருளாகும்;

"அசையும் ஆதனம்;" என்பது,-

(அ) பண்டங்கள், உரித்தாவணம் ஒன்று, தட்டுமுட்டு பொருட்பத்திரம், பிணைப்பொறுப்புரிமை, சாதனம், பணம் அல்லது ஏதேனும் அருவப் பொருளான ஆதனம்;

(ஆ) (i) ஏதேனும் ஆதனத்தின் பொருத்திலுள்ள அக்கறை;

(ii) ஒப்படைப்பானது அசையாத ஆதனத்திலுள்ள சாட்டுணிக்காரருடைய அக்கறையை அளிக்காத அல்லது கைமாற்றாத விடத்து, ஏதேனும் அசையாத ஆதனத்தின் ஈடு, விதிப்பனவு அல்லது குத்தகையொன்றின் கீழ் கொடுப்பனவுக்கான உரிமையின் ஒப்படைப்பொன்று;

"மாற்றம் பற்றிய அறிவித்தல்;" என்பது, நிதியளிப்புக் கூற்றைப் பொறுப்புவிடுவிப்பதற்கென அல்லது வேறு வகையாகத் திருத்துவதற்கென பணியகத்துக்குச் சமர்ப்பிக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் படிவத்தில் உள்ளடக்கப்பட்ட தரவுகள் என்று பொருளாகும்;

"தீர்ப்புப்பற்றிய அறிவித்தல்;" மற்றும் "உரிமைக்கோரிக்கை பற்றிய அறிவித்தல்;" என்பன, இச்சட்டத்தின்கீழான பதிவொன்றைப் பயனுறுத்துவதற்கு அதிகாரசபையிடம்

பதிவு செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் படிவத்திலான தரவுகள் என்று பொருளாகும் என்பதுடன், சந்தர்ப்பம் அவ்வாறு ஏற்றுக்கொள்ளுமிடத்து, அத்தகைய பதிவின் திருத்தம், புதுப்பிப்பு அல்லது பொறுப்புவிடுவிப்புக்குப் பயன் கொடுப்பதற்கென அதிகார மளிக்கப்பட்ட தரவுகளையும் உள்ளடக்கும்;

“பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடப்பாடு” என்பது, ஒரு கடப்பாட்டின் கொடுப்பனவுக்கு அல்லது புரிகைக்குப் பிணைப்பொறுப்பளிக்கின்ற குத்தகையின்கீழ் செலுத்தப் படற்பாலதான தொகையைத் தீர்மானிக்கும் நோக்கத் துக்காகப் பின்வருவன என்று பொருளாகும்:-

(அ) குத்தகையின்கீழ் வாடகையாகச் செலுத்தப்படு வதற்குத் தொடக்கத்தில் ஒப்பந்தஞ் செய்யப்பட்ட தொகை; அத்துடன்

(ஆ) செலுத்தப்பட்ட தொகைகளைப் கழித்து, துணைமைப் பொருளின் சொத்தாண்மையைப் பெறுவதற்குக் குத்தகை பெறுநரினால் செலுத்தப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட தொகை ஏதேனுமிருப்பின் அது உட்பட, குத்தகை நியதிகளின் கீழ் செலுத்தப்படற் பாலனவான வேறெல்லாத் தொகைகளும்;

“அடகுபிடிப்பவர்;” என்பது, (90ஆம் அத்தியாயமான) அடகுபிடிப்போர் கட்டளைச்சட்டத்தில் அப்பதத்துக்குக் கொடுக்கப்பட்ட அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

“அடைமானம் வைப்பவர்” என்பது, அடகுபிடிப்பவருக்கு அடைமானத்தில் அல்லது அடகாக பண்டங்களை ஒப்படைக்கின்ற ஆள் என்று பொருளாகும்;

"விதித்துரைக்கப்பட்ட" என்பது, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்டது என்று பொருளாகும்;

"வரும்படிகள்" என்பது, துணைமைப்பொருளின் ஏதேனும் கையாளுகையிலிருந்து நேரடியாக அல்லது நேரடியாக வல்லாமல் பெறப்பட்ட எவ்வடிவத்தினதுமான அடையாளங்காணத்தக்க அல்லது கண்டறியத்தக்க அசைவுள்ள ஆதனம் அல்லது அதிலிருந்தான வரும்படிகள் என்று பொருளாகும் என்பதுடன், பின்வருவனவற்றையும் உள்ளடக்கும்:-

(அ) ஒரு காப்புறுதிக் கொடுப்பனவுக்கான அல்லது அதிலிருந்தான வரும்படிகளுக்கான உரிமையுட்பட, துணைமைப்பொருளுக்கு விளைவிக்கப்பட்ட இழப்புக்கான அல்லது சேதத்துக்கான நட்டோத்தரவாதத்தை அல்லது நட்டஈட்டைக் குறிக்கின்ற ஏதேனும் கொடுப்பனவு; அத்துடன்

(ஆ) தட்டுமுட்டுப்பொருட் பத்திரம், ஒரு சாதனம் அல்லது ஏதேனும் அருவப்பொருளின் முழுமையான அல்லது பகுதியளவிலான பொறுப்புவிடுவிப்பில் அல்லது மீட்பில் செய்யப்பட்ட ஏதேனும் கொடுப்பனவு;

"கொள்வனவு" என்பது, விற்பனை, குத்தகை, ஈடு, அடைமானம், சோந்தை, கொடை அல்லது அசைவுள்ள ஆதனத்தில் அக்கறையொன்றை உருவாக்குகின்ற வேறேதேனும் ஒத்தியைவான கொடுக்கல்வாங்கல் மூலம் பெறுவதினை உள்ளடக்கும்;

"பெறுநர்" என்பது பெறுநர் மற்றும் முகாமையாளரை உள்ளடக்குகின்றது;

"பதிவுசெய்யப்பட்ட அக்கறை" என்பது, தகைமைவாய்ந்த அதிகாரசபையுடன் பதிவுசெய்யப்பட்ட அசையாத ஆதனத்திலுள்ள உரிமை என்று பொருளாகும்;

"பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட திறத்தவர்" என்பது-

(அ) ஆளொருவரின் சொந்த நன்மைக்காகப் பிணைப் பொறுப்புரிமையை வைத்திருக்கின்ற அவ்வாள் என்று பொருளாகும்;

(ஆ) வேறோர் ஆளின் நன்மைக்காகப் பிணைப் பொறுப்புரிமையை வைத்திருக்கின்ற ஆள் என்று பொருளாகும்;

(இ) ஒரு நம்பிக்கைப்பொறுப்புச் சட்டமுறையா வணத்தில் பிணைப்பொறுப்புரிமை அடங்கியிருப்பின், நம்பிக்கைப்பொறுப்பாளர் என்று பொருளாகும்; அத்துடன்

(ஈ) சந்தர்ப்பம் அவ்வாறு ஏற்றுக்கொள்ளுமிடத்து, பெறுநரை உள்ளடக்கும்;

"பிணைப்பொறுப்பு உடன்படிக்கை" என்பது, ஒரு பிணைப் பொறுப்புரிமையை உருவாக்குகின்ற அல்லது அதற்கேற்பாடு செய்கின்ற உடன்படிக்கை என்று பொருளாகுமென்பதுடன், ஒரு பிணைப்பொறுப்புரிமையைச் சான்றுப்படுத்துகின்ற ஆவணத்தையும் உள்ளடக்கும்;

"பிணைப்பொறுப்புரிமை" என்பது, ஒரு கடப்பாட்டின் கொடுப்பனவுக்கு அல்லது புரிகைக்குப் பிணைப்பொறுப்பளிக்கின்ற அசைவுள்ள ஆதனத்திலான அக்கறை என்று பொருளாகுமென்பதுடன், அக்கறையானது ஒரு கடப்பாட்டின் கொடுப்பனவுக்கு அல்லது புரிகைக்குப் பிணைப்பொறுப்பளித்தாலுஞ்சரி அல்லாதுவிடினுஞ்சரி, பின்வருவோரின் அக்கறையையும் உள்ளடக்கும்:-

(அ) ஓராண்டுக்கு மேற்பட்ட காலத்துக்கான குத்தகையின் கீழான குத்தகைகொடுநர்; அத்துடன்

(ஆ) ஒரு கணக்கின் அல்லது தட்டுமுட்டுப் பொருட் பத்திரத்தின் கைமாற்றுணி;

"நம்பிக்கை பொறுப்புச் சட்டமுறையாவணம்" என்பது, எந்தப் பிணைப்பொறுப்பு உடன்படிக்கையின் நியதிகளின் மூலம் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்று, பங்கு மூலதனத்துடனோ அதுவின்றியோ மற்றும் எவ்விடத்திலும் அல்லது எவ்வாறாயினும் கூட்டிணைக்கப் பட்டதாயினுஞ்சரி, தனிசுக் கடப்பாடுகளை வழங்குகின்றதோ அல்லது அவற்றுக்கு உத்தரவாதமளிக்கின்றதோ அல்லது தனிசுக் கடப்பாடுகளின் வழங்குகைக்கு அல்லது உத்தரவாதத்துக்கு ஏற்பாடு செய்கின்றதோ மற்றும் அவ்வாறு வழங்கப்பட்ட, உத்தரவாதமளிக்கப்பட்ட அல்லது ஏற்பாடு செய்யப்பட்ட தனிசுக் கடப்பாடுகளை வைத்திருப்போருக்கான நம்பிக்கை பொறுப்பினராக ஆளொருவரை நியமிக்கின்றதோ அந்தப் பிணைப்பொறுப்பு உடன்படிக்கை என்று பொருளாகும்; அத்துடன்

"பெறுமதி" என்பது, ஓர் ஒப்பந்தத்தை ஆதாரப்படுத்துவதற்குப் போதியதாகவுள்ள ஏதேனும் பிரதிபயன் என்று பொருளாகுமென்பதுடன், ஒரு முன்னிகழ் தனிசையும் அல்லது பொறுப்பையும் உள்ளடக்கும்; அத்துடன் அதற்கிணங்கப் "புதிய பெறுமதி" என்பது, ஒரு முன்னிகழ் தனிசு அல்லது பொறுப்புத் தவிர்ந்த பெறுமதி என்று பொருளாகும்

(2) இச்சட்டத்தினால் வேறுவகையாக வெளிப்படையாக ஏற்பாடுசெய்யப்பட்டாலொழிய, எவையேனும் பண்டங்கள் "பாவனையாளர் பண்டங்களா", "பொருட் பதிவேடா" அல்லது "உபகரணங்களா" என்பது பற்றிய தீர்மானம் பிணைப்பொறுப்புரிமை உருவாக்கப்பட்ட நேரத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

(3) முப்பத்தைந்தாம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக வரும்படிகளில் பிணைப்பொறுப்புரிமை கொண்டுள்ள ஆளுக்கும் வரும்படிகளில் உரிமைகளைக் கொண்டுள்ள அல்லது அவற்றைக்

கையாண்டுள்ள ஆளுக்கும் இடையே நம்பகப்பொறுப்புத் தொடர்பு இருப்பினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி வரும்படிகள் கண்டறியப் படத்தக்கனவாக வுள்ளன.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**76.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை “பிரகாசன பியச”, அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*